
# வ.உ.சிதம்பரம் பிள்ளை

## மலர்

XVC 14.
1951



ளியீடு : பம்பாய்த் தமிழ்ச் சங்கம், மாதுங்கா

# வ. உ. சிதம்பரம் பிள்ளை

(கட்டுரைகள் தொகுதி)

வெளியீடு:

பம்பாய்த் தமிழ்ச் சங்கம்,

மாதுங்கா.

18—11—51

வ. உ. சி. தினம்.

விலை ரூ. 1—4—0.

6496

## நமஸ்காரம்.

★ ஆழ்கடல் மீது செங்கோல் செலுத்திய ஆதிகாலத் தமிழனை நினைவூட்டிய தீரர் வ. உ. சிதம்பரம் பிள்ளையின் பெயரால் ஒரு மாபெரும் கப்பல் கட்டினாலும் அது தமிழனின் ஆர்வத்தையும் மதிப்பையும் அளவிடுவதாகாது. 1946-ம் வருடம் கப்பலோட்டிய தமிழருக்காகத் தென்னாட்டில் திரட்டப்பட்ட நிதிக்கு பம்பாய்த் தமிழ்ச் சங்கமும் பங்குகொண்டு பொருளுதவி செய்தது. எனினும் அத்துடன் திருப்தி ஏற்படுவதாக இல்லை. அலைகடலைப் போல இலக்கியக் கடலிலும் தனது ஆற்றலை நிலைபெறச் செய்த மேதையின் பெயரில் ஒரு சிறிய நினைவு மலராவது கொண்டுவர வேண்டுமென்று சங்கம் விரும்பியது. நான்கு வருடகாலம் சங்க ஏடுகளில் 'தீர்மானமாக' இருந்தபிறகு, இன்று ஒரு வனப்புமிக்க புத்தக வடிவில் உருவாகி, உங்களது கரத்தை அலங்கரித்திடும் இம்மலர் எங்களது கன்னி வெளியீடு என்பதை நினைக்கும்போது முதன் முதலாகக் காகிதக் கப்பல் விட்டுக் களிக்கும் குழந்தையின் உள்ளக் குதூகலம் உண்டாகிறது.

★ இவ்வரிய முயற்சிக்குக் கூட்டாக நின்று விஷயதானம் செய்து உதவிய அறிஞர்கள் பலர், பிள்ளையவர்களோடு பேசிப் பழகிய பாக்கியம் பெற்றவர்கள். கப்பலோட்டிய தமிழருடைய நினைவு மலர் என்பதால் ஏற்கனவே புத்தகத்துக்கு உள்ள மதிப்பு, ரஸமாக விஷயதானம் செய்துள்ள பெரியோர்களைக் கொண்டு பன்மடங்கு மேலும் உயர்ந்துளது. இம்மேம்பாட்டிற்குக் காரணமான அறிஞர்களுக்கு எங்களது மனப்பூர்வமான வந்தனங்கள்.

★ வடக்கே பம்பாயில் இருந்துகொண்டு தமிழில் ஒரு புத்தகம் வெளியிடுவது என்பது எளிதான காரியமல்ல. எனினும் வெகு தூரத்திலுள்ள கருணாநிதி அச்சக உரிமையாளர் திரு. ஜமால் அவர்களது ஒத்துழைப்பு இதனை சாதனை செய்திட உதவியது. இம்முயற்சிக்குச் சிகரம் வைப்பது போல் அழகிய மேலட்டைப் படத்தை உருவாக்கியுள்ள ஓவியர் ஸ்ரீ சங்கர் சேவையும், எங்களது வேண்டுகோளுக்கிணங்கி விஷயதானம் செய்துள்ள அறிஞர்களின் பணியும் உடலுக்கு உயிராக நிற்கும் உப்பை நிகர்த்தவை. அவர்களுக்கு எங்களது நன்றி.

மாதுங்கா,
18—11—51. } **பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தார்.**

## பொருளடக்கம்.

★


அஞ்சலி
கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

2. வீரச் சிதம்பரம் பிள்ளை
யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

3. நான் கண்ட வ. உ. சி.
திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை

4. வ. உ. சி. செய்த உதவி
திரு. பொ. திருகூடசுந்தரம்

செயற்கரிய செய்த பெரியார்
டாக்டர் மு. வரதராசன்

6. உலகத்தை ஆள......!
திரு. வ. உ. சி. சுப்ரமணியம்

கப்பல் ஏறுவாயோ ?
திரு. ரகுநாதன்

8. பிள்ளையின் பெருமை
காவலர் திரு. சோமசுந்தர பாரதியார்

9. சுதந்திர அஸ்திவாரம்
திரு. ஏ. ஜி. வெங்கடாச்சாரி

10. செய்ந்நன்றி மறவாச் செம்மல்
பரலி திரு. சு. சண்முகசுந்தரம்

நாவாயாண்ட சிதம்பரனார்
திரு. த. பு. நவநீதகிருஷ்ணன்

12. தென்னாட்டுத் திலகர்
திரு ஏ. வி. பால் நாடார்

தருக்கி நின்ற தமிழன்
திரு பே. ந. குணச்சந்திரன்


★



# அஞ்சலி.

★

பாடடிக் கடுங்காவல் தண்டனையில்
உப்பிலாக் கூழுண் டுடல்மெலிந்தோன் - ஒப்பிலாச்
செந்தமிழ்ச் செல்வன் சிதம்பரனை அன்போடு
சிந்தனைசெய் நெஞ்சே தினம்.

மஞ்சிலா வான மதியின் ஒளிபோல
விஞ்சிநீ டூழி விளங்குகவே - வன்சிறையில்
செக்கிழுத்த வீரன் சிதம்பரன் மெய்ப்புகழ்
மக்களிடை ஓங்கி வளர்ந்து.

— கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை.

# வீரச் சிதம்பரம் பிள்ளை.

★

வீர சிதம்பரம் பிள்ளை – தமிழ்
வித்தகன் முத்தமிழ் நாட்டில்
பாரத பக்திக் கனலைத் – தூண்டிப்
பாய்ந்து பணிசெய்ய வந்தான்;
தீரன் இவனைப்போ லுண்டோ? – தமிழ்ச்
சிங்கம் திலகர் வலக்கை;
சோர்வின்றி நாட்டுக் கொடியைப் – பல
தொல்லையைத் தாங்கிப் பிடித்தான்!

பேச்செல்லாம் வீர முழக்கம் – அவன்
போந்த வீரப் பிழம்பாம்!
மூச்செல்லாம் வீரக் கனலாம் – அவன்
முன்னின்ற காரியம் வெல்லும்;
ஓய்ச்சலில் லாமல் உழைத்தான் – தேசம்
ஓங்கிடக் கப்பல் விடுத்தான் – மயிர்க்
கூச்சலெடுக்கக் கொடிய – சிறைக்
கோட்டத்திற் செக்கும் இழுத்தான்!

ஆண்மைச் சிதம்பரம் என்னில் – நெஞ்சில்
அச்சம் ஒழிந்தனல் ஏறும்
வீண் மயக்கங்களைப் போக்கி – முழு
விடுதலைத் தாகத்தை யூக்கி,

மாண்பாருஞ் சுதேச விரதம் - கொள்ள
மக்கள் உணர்வை யெழுப்பி - வைரத்
தூண்போற் சுதந்தரந் தாங்கி - எற்றுந்
துன்பப் புயலெதிர் நின்றான்!

எங்கள் சிதம்பரம் என்னில் - வீரம்
ஏறுது நெஞ்சினிற் சோநது துன்பம்
பொங்குதோர் ஆவேச வெள்ளம் - தளை
பொடபடென் றறுந்து விடுதலை சேர
வங்கம் அழைத்தது நம்மை - அதில்
வாழி சிதம்பரம் என்றிசைத் தாடும்
தங்கக் கொடிதோன்று தையே - தமிழ்த்
தந்த சிதம்பரம் சந்ததம் வாழ்க!

விடுதலை பெற்றெங்கள் அன்னை - ஜய
வீரத் திருமுடி சூடி,
நடுநிலை நாட்டுமந் நாளில் - வெற்றி
நல்கிய தீரர் பெயரை
இடிமுரச சாற்றிடு நாளில் - “வாழி
எங்கள் சிதம்பரம்” என்போம்! நாட்டுக்
கொடியை விண்ணெட்டப் பிடிப்போம்-அவன்
கொற்ற மலர்கள் சொரிவான்!

— யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்.

# நான் கண்ட வ. உ. சி.

திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை பி. ஏ., பி. எல்.

1907-ம் ஆண்டு. ஒரு நாள் நான் கற்று வந்த இந்து கலாசாலையில் மாணாக்கரிடையே ஒருபரபரப்பு உண்டாயிருந்தது. அன்று மாலை சுமார் ஐந்தரை மணிக்குத் தூத்துக்குடியிலிருந்து தேச பக்தர் சிதம்பரம் பிள்ளை திருநெல்வேலிக்கு வந்து கீழ ரத வீதியில் அம்மன் சன்னிதிக்கு எதிரே பேசப் போகிறார் என்று ஒரு வதந்தி.

குறித்த நேரத்திற்கு முன்பே ஜனங்கள் பெருந்திரளாகக் கூடியிருந்தார்கள். முற்போக்கு எண்ணமும், நாட்டுப்பற்றுமுள்ள மாணவர் சிலரும் அக்கூட்டத்திலுண்டு. அக் கூட்டத்திற்கு நானும் கலாசாலையிலிருந்து நேரே போய்ச் சேர்ந்தேன். குறித்த நேரம் கடந்துவிட்டது. ஆனால், ஜனங்கள் காத்துக்கொண்டிருந்தார்களே யல்லாமல் கலைந்து போகவில்லை. சுமார் 6-மணிக்குமேல் தேசபக்தர் வந்து சேர்ந்தனர். அவர்கூட இரண்டொருவர் இருந்தார்கள். அவர்கள் இன்னாரென்று இப்பொழுது எனக்கு ஞாபகமில்லை. ஒருவர் சுப்பிரமணிய சிவா என்று நினைக்கிறேன்.

குட்டையான சரீரம், திரண்டு உருண்ட கை கால்கள், உருண்டை முகம், நிறம் சற்றுக் கறுப்புத் தான், மேலே கோட்டும் அங்க வஸ்திரமும், தலையில் தலைப்பாகை. அவரைப் பார்த்தவுடன் முதலாவது

இவர் என்ன பேசமுடியும் என்றுதான் நினைத்தேன். ஆனால் பேசத்தொடங்கிச் சிறிது நேரத்திற்கெல்லாம் விஷயங்களைத் தெளிவாக எடுத்துச் சொன்ன முறை என்னை வசீகரித்தது. அன்னிய அரசாங்கத்தினர் நாம் சிறிதும் முன்னேற வொட்டாதபடி வாணிகம் முதலியன புரிந்து, நம் நாட்டுச் செல்வத்தைச் சுரண்டிக் கொண்டு போவதைக் குறித்து விஸ்தாரமாகப் பேசினர். ஒவ்வொருவனும் தேசாபிமானமுடையவனாக இருத்தல் வேண்டும் என்று வற்புறுத்தினர். இதைப் பற்றிப் பேசும்பொழுது அவர் தம்மையே மறந்து பரவசமாய் நின்று, கேட்போர் உள்ளத்தை நேரடியாய்த் தாக்கினர் என்று சொல்லவேண்டும். சுமார் ஒரு மணி நேரம் பேசியிருப்பார். கேட்ட மக்கள் அனைவரும் மிக்க குதூகலமுற்றனர். நான் வ. உ. சி. யைக் கண்ட முதற்காட்சி இதுதான்.

திருநெல்வேலியில் மாணவர் உலகம் இரண்டு பட்டிருந்தது. வங்காளப் பிரிவினையைக் குறித்தும், விபின சந்திர பாலரின் தேசிய பேச்சுக்களைக் குறித்தும், ஆங்கிலத் துரைத்தனத்தைக் குறித்தும், சுதேசிய ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியைக் குறித்தும் வாக்குவாதங்களும் சச்சரவுகளும் ஏற்படாத நாளே இல்லையென்று சொல்லலாம். ஆனால் பொதுப்பட மாணவர்களில் பெரும்பாலோர் நாட்டுப் பற்று மிகுந்தவர்களாகவே இருந்தனர். அவர்களுடைய உள்ளத்திலே வ. உ. சி. நிரந்தரமான ஒரு ஸ்தானத்தைப் பெற்றுவிட்டார். மாணவர் உள்ளத்திற் போலவே தொழிலாளிகள் உள்ளத்

திலும் வ. உ. சி. ஒரு சிறந்த இடத்தைப் பெற்று விட்டனர். இவ்விரு பகுதியினர் இடத்தும் இவர் காட்டிய பேராதரவே இதற்குக் காரணமாகும்.

தூத்துக்குடியில் மில் தகராறுகளும், புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட கப்பல் ஸ்தாபனங்களும், இவ்விரண்டு வகையிலும் வ. உ. சி. எடுத்துக்கொண்ட பேருழைப்பும் இவரை ஒரு தேசபக்த வீரராகக் கருதும்படி செய்தன. இவருடைய அரிய குணங்கள் பலரையும் வசீகரித்தன. கள்ளங்கபடில்லாத திறந்த உள்ளமும் நேர்மையான பேச்சும் ஆழ்ந்த தேச பக்த உணர்ச்சியும் அவர் சென்ற இடங்களி லெல்லாம் இவருக்குப் பெருஞ் சிறப்பை நல்கின. முக்கியமாகத் தூத்துக்குடியிலும் திருநெல்வேலி யிலும் இவருக்கு அமோகமான செல்வாக்கு இருந்தது. இதனைத் தெரிந்த நெல்லையிலுள்ள வெள்ளை அதிகாரிகள் இவரைத் தண்டித்துச் சிறையி லிடக் கருதிக் கொண்டனர். போலிக் குற்றங்கள் இவர்மீது சாட்டி இவரை 1908-மார்ச்சு மாதத்தில் கைது செய்தனர். இவ்விபரம் நெல்லை நகரில் பரவியதும் பெரும் புரட்சியோ என்று கருதுமாறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாணவர்கள் பள்ளிக் கூடம் செல்ல மறுத்து ஊர்வலத்தில் பங்குகொண்ட னர். அவ்வாறு சென்றவர்களில் நானும் ஒருவன். எனது உற்ற நண்பர்கள் இருவரும் என்னுடன் வந்தனர். இது நிகழ்ந்தது மார்ச் மாதம் 13-ம் தேதி.

மாணவர்களின் ஊர்வலத்தோடுகூட வேண் டத் தகாத பலரும் உடன் சென்று முனிசிபல்

கட்டிடம் முதலியவற்றில் தீ வைத்துத் தமது ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ள இதுதான் சமய மென்று தீச்செயல் புரிந்தனர். ஆஷ்துரை என்ற அதிகாரி கைத் துப்பாக்கிப் பிரயோகத்தால் யாதொரு பாவமும் அறியாத ஏழை மக்களைச் சுட்டுக் கொன்றார். பொதுமக்களது கோபம் இச் செயலால் அதிகரித்தது. ரிஸர்வ் போலீஸை வரவழைத்து அங்கங்கே அமைக்கலாயினர். எங்கள் கலாசாலைகளும் இக் குழப்பத்தினால் இரண்டு மூன்று நாட்கள் ஒழுங்காய் நடைபெறவில்லை.

பின்னர், விகற்ந்த தண்டனையும், அப்பீல் களும், முடிவாகத் தண்டனை குறைக்கப்பட்ட வரலாறும், ஆங்கிலப் பத்திரிகை உட்பட பல பத்திரிகைகளும் இத் தண்டனையைக் குறித்துக் கண்டித்து எழுதியதும், லார்டு மார்லி, லார்டு மிண் டோவுக்கு இத் தண்டனையின் அநியாயத்தைக் குறித்து எழுதியுள்ள கடித விஷயமும் சரித்திரச் செய்திகள். இச் செய்திகளையெல்லாம் பத்திரிகை களில் வாசித்து வ. உ. சி.யின் சிறை வாழ்க்கையில் என் மனம் பெரிதும் ஒன்றிவிட்டது. முக்கியமாக இவரைச் செக்கு இழுக்கும்படியாகச் செய்ததும், மலமகற்றுமாறு வற்புறுத்தியதும் எனக்கும் என் போன்ற நோக்கு உடையவர்களுக்கும் பெரிதும் துன்பத்தை விளைத்தன. மக்களெல்லாம் அந்நிய அரசாட்சியின் கொடுமையைப் பழித்துக் கூறி அடங்காத கோபத்தைக் கொண்டிருந்தனர். நெல்லைப் புரட்சியில் ஆஷ்துரை செய்த அட்டூழி யத்திற்கு அவரும் கொலைத் தண்டனை அடைந்தார்.

வ. உ. சி. யின் விடுதலையின் பின் அவர் ஒரு புது மனிதனாக மாறிவிட்டார் என்றே சொல்ல வேண்டும். இதுவரையும் தேசிய விஷயங்களில் உழைத்து வந்தவர் இப்பொழுது தமது தாய் மொழியாகிய தமிழின் பொருட்டு உழைக்க முன் வந்து சென்னையிலேயே சில ஆண்டுகள் தங்கினார். அப்பொழுது தொல்காப்பியத்தை இவர் கற்றுக் கொண்டிருந்த சமயம். எந்த நூலை எடுத்தாலும் இவர் முன்பிருந்த நூலாசிரியர்கள் கூறியதனை அலசிப் பார்த்துப் புதிய உரை காணுவதிலே முயன்று வருவார். இலக்கணம் முதலிய விலங்குகளை யெல்லாம் அவர் அறவே களைந்து எறிந்துவிடுவார். துணிகரமும் உணர்ச்சி வேகமும், எதனையும் தன் னிலையிலிருந்து நோக்கும் நேர்மையும் இவரது முக்கியமான இயல்புகள். எளிமையாக உரை களிருத்தல் வேண்டும் என்ற பெருங் கருத்துக் கொண்டவர். தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர் கண்ட உரை எளிதாக இருத்தல்கண்டு அதனை அச்சிடும் தொழிலில் இவர் முயன்றார். இதனைத் தெரிந்த நெல்லை அறிஞர் ஒருவர் இவருக்கெனப் பிரதிகள் சிருஷ்டித்துக் கொடுக்க முன் வந்தனர். என்னிடம் இளம்பூரணர் உரைப் பிரதி இருப்ப தாகத் தெரிந்து எனக்கு 1913-ல் ஒரு கடிதம் எழுதினார். இக்காலம் முதல் வ. உ. சி. யும் நானும் நெருங்கிய இலக்கியத் தோழர்களாய் விட்டோம். தொல்காப்பியம் பற்றி எனக்குப் பல விஷயங்களை எழுதி வந்தார்கள். நானும் அவர்களுக்குப் பல கடிதங்கள் எழுதியுள்ளேன். தொல்காப்பியம் எழுத்ததிகாரம் அவர்களால்

வெளியிடப்பெற்றது. பொருளதிகாரத்தில் முதல் இரண்டு இயல்களும் அவர்களே பரிசோதனை செய்து வெளியிட்டார்கள். இவ் விஷயத்தில் சென்னையில் அவர்களுக்கு உதவிபுரிந்து வந்தவர்கள் திரு. செல்வகேசவராய முதலியார் முதலியவர்கள். நாங்கள் இலக்கியத் தோழர்களாயிருந்தும், பல ஆண்டுகளாக ஏகதேசமாகவேனும் சந்தித்து வந்தோம் என்றுகூடக் கூறமுடியாது. கடிதப் போக்குவரத்திலேயே எங்கள் நட்பு அமைவுற்றது.

நெடுங் காலத்திற்குப் பின் 1926-ம் ஆண்டு இறுதியில் நான் சென்னைக்குத் தமிழ் லெக்ஸிக்கன் பதிப்பாசிரியனுக வந்து சேர்ந்தேன். அப்போது வ. உ. சி. அவர்கள் வக்கீலாகத் தொழில் புரிய தூத்துக்குடிக்குச் சென்றுவிட்டார்கள். ஒருமுறை சென்னை மயிலாப்பூரில் இந்துமத பரிபாலன சபையின் கமிஷனராக இருந்த திரு. டி. கே. சிதம்பரநாத முதலியாரவர்கள் வீட்டிற்கு நானும் எனது நண்பர் பி. ஸ்ரீ. ஆச்சாரியாவும் சென்றிருந்தோம். அப்பொழுது அங்கே வ. உ. சி. அவர்கள் இருந்தார்கள். அவர்களோடு வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தோம்.

எங்கள் பேச்சு முக்கியமாகத் திருக்குறளின் உரையைப் பற்றியதாக இருந்தது. பரிமேலழகர் உரை பல இடங்களில் பிழையாயுள்ளது எனவும், முதல் நான்கு அதிகாரங்கள் வள்ளுவர் இயற்றியன அல்ல எனவும் பிள்ளையவர்கள், அவர்களுக்கு இயற்கையாயுள்ள ஆவேசத்தோடு பேசினர்கள். நான் அவர் பேச்சினிடையில் புகுந்து, சிறிதும்

உணர்ச்சிக்கு இடங்கொடாதபடி, பரிமேலழகர் உரையின் போக்கைப் பற்றியும், பொதுப்பட அதன் சிறப்புக்களைப் பற்றியும், முதல் நான்கு அதிகாரங்களின் அமைப்பைப் பற்றியும், சில வார்த்தைகள் பேசினேன். எனது அமைதியும், தருக்க நெறி பிறழாத பேச்சும், ஆழ்ந்த தமிழ் உணர்ச்சியும், பிள்ளையவர்களைப் பிணித்துவிட்டன என்று சொல்லலாம். இதன் காரணமாக அவர்கள் என்னிடம் மிக்க அன்பும் நம்பிக்கையும் கொண்டு விட்டார்கள். பல்வேறு வகையான எனது இலக்கிய முயற்சிகளைத் தெரிந்து பெரிதும் ஆதரவு காட்டினார்கள். எனக்கு வேண்டும் ஏட்டுப் பிரதிகளை வரவழைத்துக் கொடுப்பதாக வாக்களித்தார்கள். அவ்வாறே அவர்கள் மறையும் வரை உதவி புரிந்தும் வந்தனர். மேற்குறித்த நிகழ்ச்சிக்குப் பிற்பாடு, அவர்கள் சென்னைக்கு வரும் பொழுதெல்லாம் என்னைக்காணாது திரும்புவதில்லை. என்னோடு சிலபொழுது தங்கியிருத்தலும் வழக்கம்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் மற்றை ஏழு இயல்களையும் வெளியிடவேண்டும் என்ற ஆத்திரம் வ. உ. சி. அவர்களுக்கு மிகுதியாயிருந்தது. அவற்றை நான் பதிப்பித்து வெளியிடுதல் வேண்டும் என்று வ. உ. சி. அவர்கள் விரும்பினார்கள். அவர்களிட்ட ஆணையை நானும் மேற்கொண்டு தொல்காப்பியம் பொருளதிகாரம் முழுமையும் பதிப்பித்தேன். அப் பதிப்பு எங்கள் இருவர் பெயராலும், வாவிள்ளா ராமசாமி சாஸ்திருலு பதிப்பகத்திலிருந்து வெளிவந்துள்ளது.

எனக்கு ஏடுதேடி அளிக்கும் உதவியை எவ்வளவு உள்ளன்போடு அவர்கள் செய்து வந்தார்கள் என்பது ஒரு செய்தியால் தெரியவரும். பல அன்பர்களுக்கும் கடிதம் எழுதி ஏடுகளைப் பெற்று எனக்கு அனுப்பியதோடு, தாமே நேரில் என்னுடன் வந்து ஏடு பெற்றுக் கொடுத்ததும் உண்டு. ஒரு முறை ஆழ்வார் திருநகரில் அவர்களுக்கு நெருங்கிய உறவினரான தாயவலம் தீர்த்தான் கவிராயர் வமிசத்தினர் வீட்டிற்குத் தாம் தூத்துக்குடியிலிருந்து வருவதாகவும், அச்சமயம் என்னை அங்கு வரும்படியாகவும் கடிதம் எழுதியிருந்தார்கள். விடுமுறைக் காலமானதால் எனக்கும் சௌகரியம் இருந்தது. அவர்கள் கடிதத்தின்படியே அங்குச் சென்று ஏட்டுச் சுவடிகளைப் பரிசோதித்து வேண்டும் சுவடிகளை எடுத்து வந்தேன்.

அவர்கள் இறுதியாகக் காட்டிய அன்பினைக் குறித்து மட்டும் இங்கே கூறி அமையலாம் என்று நினைக்கிறேன். 1936-ல் சென்னை சர்வ கலாசாலையில் தமிழாராய்ச்சித் துறைத் தலைவரது நியமனம் நடைபெற இருந்தது. அதற்கு நான் முயன்று வந்தேன். எனது உற்ற நண்பர்கள் போல் பாவித்து ஒழுகி, யாதொரு தகுதியுமற்ற தமக்கு அந்த வேலை கிடைக்க வேண்டும் என்று சிலர் முயற்சி செய்ததும் உண்டு. அச்சமயம் வ. உ. சி. அவர்கள் சென்னைக்கு வர நேர்ந்தது. பிறர் செய்யும் முயற்சிகளையெல்லாம் ஒருவாறு தெரிந்து கொண்டு, அவர் தாமே என்னிடம் வந்து, இம்

முயற்சியில் நான் வெற்றிபெறவேண்டும் என்று எடுத்துக் கூறினர். நாங்கள் இருவரும் பதிப்பித்த தொல்காப்பியப் பிரதிகள் சில தந்து, அவற்றை நியமனக் கமிட்டி அங்கத்தினர்களுக்கு அனுப்ப வேண்டும் என்று வற்புறுத்திச் சொன்னர். உள்ளத் தூய்மையோடு கூறிய இந்த மொழிகள் எனக்குப் பெரியதோர் ஊக்கத்தைக் கொடுத்தன. இம் முயற்சியில் நான் வெற்றியும் பெற்றேன். இந் நிகழ்ச்சிக்குப் பின்பு விடுமுறைக் காலத்தில் நான் திருநெல்வேலியிருந்து தூத்துக்குடி வந்து வ. உ. சி. அவர்களைச் சந்தித்தேன். நாங்கள் இருவரும் ஒருநாள் முழுவதும் கலந்து பேசிக் கொண்டிருந்தோம். இதுவே வ. உ. சி. அவர்கள் எனக்கு அளித்த கடைசிக் காட்சி.

நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் நெருங்கிய சம்பந்த முடையன. மொழிப் பற்றிலே தொடங்கி அதிலேயே நான் வாழ்ந்து வருகிறேன். தேசப் பற்று மொழிப் பற்றின் அடுத்தபடியாகத்தான் என் உள்ளத்தில் நிலவுகிறது. நாட்டுப் பற்றில் வ. உ. சி. அவர்கள் முனைந்து நின்று, பிற் காலத்தில் மொழிப் பற்றில் அமைந்து விட்டார்கள்.

வ. உ. சி. அவர்களை நான் மறக்க முடியாது. அவரது சீரிய குணங்களை நினைக்குந்தோறும் எத்தனை சிறந்த தமிழ்ப் பெரியாரை நாம் இழந்து விட்டோம் என்ற உணர்ச்சி மேலிட்டெழுகின்றது. அவர்களது உள்ளம் அன்பினல் எப்பொழுதும் குழைந்து நின்றது. கொழுந்து விட்டெரியும் அனல் போல் தேசபக்தியும் தாய் மொழிப் பற்றும்

அவரது ஆன்மாவில் எப்பொழுதும் கனன்று ஜொலித்துக் கொண்டிருந்தன. இப் பெருமகனாரிடத்து அமைந்து கிடந்த பிள்ளைமையுள்ளம் கனிப்பட்ட வசீகர சக்தி வாய்ந்தது. வ. உ. சி. யின் சரீரம் மறைந்து விட்டது. ஆனால் அவரது பெரும்புகழ் தமிழ் மக்கள் உள்ளத்தில் என்றும் ஒளிர்ந்து கொண்டிருக்கும்.



# வ. உ. சி. செய்த உதவி.

திரு. பொ. திருகூடசுந்தரம்.

என் தந்தை பொன்னப்ப பிள்ளை அவர்கள் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டராக இருந்தார்கள். ஆயினும் எனக்கு தேச பக்தியும் தாய் மொழிப் பற்றும் உண்டாக்கியவர்கள் அவர்களே. அவர்கள் நான் பிறக்கு முன்பே வாங்கிப் படித்து மார்க் செய்து வைத்துள்ள தாதாபாய் நௌரோஜி பிரசங்க நூல் என்னிடம் அரும்பெரும் பொக்கிஷமாக இருந்து வருகிறது. அதில் அந்தப் பெரியார் பிரிட்டிஷ் அரசாங்கத்தை "ஷக்கர்-கி-சூரி" (சர்க்கரை யாலாய கத்தி) என்று வர்ணித்திருந்ததை என்னிடம் என் தந்தையார் கூறுவது இன்னும் எனக்கு நினைவில் இருந்து வருகிறது. இழந்த சுதந்திரத்தைத் தேட வேண்டுமென்ற ஆசையாகிய விதையை என் தந்தையார் இவ்வாறு என்னுடைய குழந்தை உள்ளத்தில் ஊன்றி வந்தார்கள். அது என்னுடைய மனத்தில் சிறிது சிறிதாகப் பூரித்துக் கொண்டிருந்தது.

1906-ம் வருஷத்தில் கர்சான் பிரபு என்ற வைசிராய் வங்காளத்தை இரண்டாகப் பிளந்து இந்திய சமுதாயத்தின் மனத்தைப் புண்படுத்திய பொழுது அதை எதிர்த்து நாடெங்கும் பலத்த கிளர்ச்சி உண்டாயிற்று. அதை முன்னின்று நடத்திய தலைவர் பாபு சுரேந்திரநாத் பானர்ஜியை

அரசாங்கம் சிறையிட்டது. சுதேசமித்திரன் உதவி ஆசிரியராயிருந்த குருமலை சுந்தரம் பிள்ளை அவரைப் பற்றியும், ஹிந்து, சுதேசமித்திரன் இரண்டு பத்திரிகைகளையும் ஆரம்பித்துத் தமிழ் மக்களுடைய அரசியல் கண்களைத் திறந்துவிட்டுக் கொண்டிருந்த ஜி. சுப்பிரமணிய அய்யரைப் பற்றியும் இப்பொழுது யார் பேசுகிறார்கள். அந்தக் குருமலை சுந்தரம் பிள்ளை சுரேந்திரநாத் பானர்ஜி சிறைப்பட்டதைக் கேட்டதும் சினங்கொண்டு பத்துப் பாடல்கள் இயற்றித் துண்டுப் பிரசுரமாக அச்சிட்டு நாடெங்கும் அனுப்பி வைத்தார்.

அந்தப் பிரசுரம் ஒன்று ஒருநாள் காலையில் நான் கல்வி கற்ற திருநெல்வேலி ஹிந்து கலாசாலை வாசற் சுவரில் ஒட்டப்பட்டிருந்தது. ஆனால் யாரும் அதனருகில் செல்லவில்லை. அத்தனை அச்சம் அக்காலத்தில். ஆயினும் என்னுடைய நண்பரும் சென்னை வைத்தியக் கல்லூரியில் ஆராய்ச்சி ஆசிரியராயிருந்து அண்மையில் காலஞ் சென்றவருமான காப்டன் வெங்கடாசலம் எப்படியோ இரவில்போய் அந்தப் பிரசுரத்தை எடுத்துக் கொண்டு வந்து விட்டார். அவருடைய நண்பர்கள் நாங்கள் நாலைந்து பேர். அதைப் படித்து மகிழ விரும்பினோம். எவ்வித இடையூறுமின்றிப் படிப்பதற்காக "பொன் திணிந்த புனல் பெருகும் பொருநையெனும் திருநதி" என்று கம்பர் பெருமானால் சிறப்பிக்கப் பெற்ற தாம்பிரபரணி நதிக் கரையிலுள்ள மூர்த்தீசுவரம் என்னும் கிராமத்துக்கு வடக்கே மனித சஞ்சாரமில்லாத இடத்துக்குச் சென்றோம்.

அங்கே நதி மணலில் உட்கார்ந்து கொண்டு அதுவரைப் பிரித்துப் பாராது பத்திரப் படுத்தி வைத்திருந்த அந்தத் துண்டுப் பிரசுரத்தை விரித்தோம். எங்கள் அனுபவத்தை என்ன வென்று சொல்வேன்!

நாங்கள் அதுவரை "வந்தேமாதரம்" என்னும் எழின் மொழியைப் பராபரியாகக் கேள்விப்பட்டிருந்தோமேயன்றி நேரில் அச்சில் தரிசித்ததில்லை. அந்தப் பிரசுரத்தில் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் "வந்தேமாதரம்" என்று அச்சிட்டிருப்பதைக் கண்டதும் எங்களுக்குண்டான ஆனந்தத்தை இப்பொழுது யாரும் அறிய முடியாது. அமரருங் கூட அறியார்.

எங்களில் இசையுடன் பாடக்கூடிய நண்பர் ஒவ்வொரு பாடலாகப் பாடினர். நாங்கள் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் வந்தேமாதரம் என்று வானதிரக் கோஷித்து மகிழ்ந்தோம். அந்தப் பாடல்களுள் முதற்பாட்டு என் நினைவிலுள்ளதை எழுத விரும்புகிறேன்.

அடியாருக் கல்லல் புரியும் அடையலரை
அருட்திருக்கண் அனலால் நீற்றிப்
பொடியாகப் புறத்தூதும் புண்ணிய! வெண்
பொடி யொளிரும் புனிதா! இந்தப்
படியார் திண் புகழ் படைத்த
பாபு சுரேந்திரநாத பரனைத் தொட்ட
கொடியாரைக் கொடு நரகில் தள்ளாயேல்
உன் பெயர்க்குக் குறையுண்டாமே.

இந்தப் பாடல்கள் எனது தந்தை விதைத்த சுதந்திர விதைக்கு உரம்போல் அமைவதாயின.

அதற்குப் பின் மறு வருஷம் நான் மெட்ரிக் குலேஷன் வகுப்பில் படிக்கும்பொழுது ஒரு நாள் மாலையில் மாணவர்கள் திரள் திரளாகக் கலாசாலை மூடியதும் ஆற்றங்கரை நோக்கிச் செல்வதைக் கண்டேன். அங்கு யாரோ பிரசங்கம் செய்வதாக அறிந்தேன். நான் அதுவரைப் பிரசங்கம் எதுவும் கேட்டதில்லை. அதனுல் மிகுந்த ஆவலுடன் என் சகாக்களுடன் நதிமணல் நாடிச் சென்றேன்.

அங்கே ஐயாயிரம் ஜனங்களுக்கு அதிகமாகக் கூடியிருந்தனர். தவசு மண்டபத்தின் படியில் ஏறி நின்று கொண்டு ஒரு குள்ளமான மனிதர் பேச ஆரம்பித்தார். இவர்தானு பிரசங்கி, இவரைப் பார்த்தால் பிரமாதமாகத் தோன்றவில்லையே என்று நானும் என் நண்பர்களும் பேசிக் கொண்டோம். ஆனுல் அந்த மனிதர் பேசத் தொடங்கிஞரோ இல்லையோ நாங்கள் இந்த உலகத்தில் இருக்கவில்லை. மெய்ம் மறந்து போய் வாயைப் பிளந்துகொண்டு அப்படியே உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தோம். அவர் அன்று எழுப்பிய சுதந்திர தாகம் இன்னும் எனக்கு அடங்கின பாடில்லை. என் தந்தையிட்ட விதை முளைப்பதற்கு வேண்டிய சகல பக்குவங்களையும் செய்துவிட்டார். அதற்காக அவருக்கு என்றும் நன்றி கூறும் கடப் பாடுடையேன். அந்த மகானுபாவர் தாம் வ. உ. சிதம்பரம் பிள்ளை என்று கூறப்பெறும் பெரியார்.

நான் காங்கிரஸில் சேர்ந்து, காந்தி தாசனாகி உழைக்க ஆரம்பித்த காலத்தில் – 1922-ம் ஆண்டில் திருநெல்வேலி தெற்குப் புதுத் தெருவிலுள்ள பிரசித்திபெற்ற சங்கத்தில் ஒருநாள் "குறள் கூறும் நெறி" என்பது பற்றிப்பேச நேர்ந்தது. வள்ளுவர் காட்டும் வழியைக் கூறுமுன் குறளைக் கற்க வேண்டிய முறைபற்றிச் சில மொழிகள் கூறினேன். அத்துடன் பரிமேலழகர் கூறும் சில உரைகள் பொருத்தமில்லாதிருப்பதைச் சுட்டிக் காட்டினேன். என் பேச்சு முடிந்ததும் இறுதியில் ஒருவர் வந்தனம் கூற எழுந்தவர் நான் தைரியமாகப் பரிமேலழகர் உரையில் குறை கண்டதற்காக என்னைப் பாராட்டினர். இவர் யார் என்று விசாரித்தபொழுது அன்று என் மனத்தை வசீகரித்த அந்த வ. உ. சி.யே என்று அறிந்ததும் பேரானந்தம் அடைந்தேன். இதற்கும் அவருக்கு நன்றி செலுத்துகின்றேன்.

அதன்பிறகு நீண்ட காலத்துக்குப்பின் 1934ம் ஆண்டில் நான் தூத்துக்குடி சென்றபொழுது என்னுடைய நண்பருள் சிலர் நான் அப்பொழுது ஆராய்ந்துகொண்டு வந்த "கர்ப்பத்தடை" விஷயமாக ஒரு கூட்டத்தில் பேசுமாறு பணித்தனர். மறுநாட் காலையில் நான் வ. உ. சி. அவர்களைத் தரிசிப்பதற்காக அவர்களுடைய இல்லத்திற்குச் சென்றேன். என்னைக் கண்டதும் அவர்கள் "தம்பி, வாருங்கள், நேற்று உங்கள் பிரசங்கம் என்று தெரியாமல் போயிற்றே. மழைகாலத்தில் குழந்தை பெறுமலிருப்பதற்கான வழியிருப்பதாகச் சொன்னீர்களாமே, நண்பர்கள் வந்து சொன்னார்கள்.

அந்த வழி எங்களுக்குத் தெரியாமல் போயிற்றே. என் குமாரிகள் எப்பொழுதும் கார் காலத்திலேயே பிரசவிக்க வருவார்கள். அதனால் நான் படும் கஷ்டங்கள் கொஞ்சமல்ல" என்று கூறி என்னை வரவேற்றார்கள். இதற்காகவும் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

இந்த மூன்று சம்பவங்களிலும் நான் காண்பது அவர்களுக்குள்ள சுதந்திர உணர்ச்சியே தான். முதல் நிகழ்ச்சி அரசியல் சுதந்திரத்தையும், இரண்டாவது நிகழ்ச்சி இலக்கிய ஆராய்ச்சிச் சுதந்திரத்தையும், மூன்றாவது நிகழ்ச்சி எந்தப் புதிய கருத்தையும் ஆராய்வதற்குத் தயாராகவுள்ள சுதந்திரத்தையும் காட்டுகின்றன. அத்தகைய சுதந்திர உணர்ச்சியை அளித்தமையே எனக்கு வ. உ. சி. செய்த உதவி.

# செயற்கரிய செய்த பெரியார்.

ஒரு நாடு உரிமையோடு விளங்க வேண்டு மானல், முதலாவதாக அதன் பொருளாதாரச் சுரண்டலைத் தடுக்க வேண்டும்; இரண்டாவதாகத் தாய் மொழியின் வாயிலாக அறிவை வளர்க்க வேண்டும். இந்த இரண்டும் எல்லா நாடுகளுக்கும் பொதுவான உண்மை. இதை நாற்பது ஆண்டு களுக்கு முன்பே நன்ருக உணர்ந்து வாழ்க்கையில் காட்டித் தொண்டு செய்தவர் வ. உ. சிதம்பரம் பிள்ளை.

'தேசபக்தர்' என்று பாரதியாரால் பாராட்டப் பெற்றுப் பாடவும் பெற்றவர் வ. உ. சி. அவரு டைய தேசபக்தி ஆங்கிலேயர் ஆட்சியைப் பேச்ச ளவில் எதிர்த்தது மட்டும் அல்ல; எதிர்த்துப் பேசி விட்டுச் சிறையில் புகுந்தது மட்டும் அல்ல; மேற் கூறிய இரண்டு கொள்கைகளையும் செயல்படுத்திக் காட்டிய பெருமை உடையது அவருடைய நாட்டுப் பற்று.

தமிழர்கள் பல நூற்றுண்டுகளுக்கு முன்பு கடல் கடந்து வாணிகம் செய்து வந்தார்கள் என்ப தையும், 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது தமிழ்ப் பழமொழி என்பதையும் அவர் நினைந்து நினைந்து உருகினர். தமிழ் நாட்டுக்கும், இலங்கைக்கும் இடையே வாய்க்கால் போலுள்ள

கடலைக் கடப்பதற்கும் ஆங்கிலேயரின் கப்பல் வேண்டுமா என்று கொதித்தார். 'வெளி நாட்டுக் கத்தியால் க்ஷவரம் செய்துகொள்ள மாட்டேன்' என்று சிறு சிறு துறையிலும் சுதேசிப் பற்றுடன் திகழ்ந்த அவருடைய மனம், தூத்துக்குடி துறை முகத்தில் ஆங்கிலேயரின் கப்பல் கம்பெனி இருப்பதைப் பார்த்துப் பொறுக்க முடியவில்லை. நாகரிகம் தோன்றிய நாள்முதல் கப்பல் ஓட்டிய தமிழன், இன்று அதற்காக ஆங்கிலேயரின் வாணிகத்திற்கு இடம் தருவது தகாது என்று எழுந்தார். பெரு முயற்சி செய்து பணம் திரட்டி ஒரு கம்பெனி தொடங்கி ஆங்கிலேயக் கம்பெனியுடன் போட்டியிட்டுக் கப்பல் ஓட்டினார்.

அந்தப் போட்டியைத் தவிர்ப்பதற்காக ஆங்கிலேயர் செய்த பலவகைச் சூழ்ச்சியும் பலிக்காமல் போகுமாறு செய்துவிட்டார். லஞ்சமாக ஒரு லட்சம் ரூபாய் கொடுத்து அவரை அதில் தலையிடாமல் இருக்கும்படி செய்ய முயன்று பார்த்தார்கள். தனி மனிதனுடைய தன் வாழ்விற்குக் கிடைக்கக் கூடிய லட்சம் ரூபாய்க்காக, தாய் நாட்டின் பெருமையையும் உரிமையையும் கெடுக்க எண்ணவும் நாணியது அவருடைய உயர்ந்த மனம். தூ என்று தள்ளிச் சினந்து, முன்னைவிட உறுதியாகப் போட்டியிட்டுச் சுதேசிக் கப்பல் ஓட்டினார். இவ்வாறு அயலாரின் பொருளாதாரச் சுரண்டலைத் தடுக்க முயன்ற காரணத்தால், அதிகாரிகளின் பகைக்கும், வறுமையின் தொல்லைக்கும் ஆளானார் வ. உ. சி.

பொருளாதாரச் சுரண்டலால் மக்களை அடிமையாக்குவது கண்ணுக்குத் தெரிந்த செயல். ஆனால் அந்நிய மொழியின் வாயிலாக மக்களின் அறிவை அடிமையாக்குவது கண்ணுக்குத் தெரியாதது. அதையும் தடுக்கவேண்டும் என்ற ஆர்வங் கொண்டவர் வ. உ. சி. தேசபக்தர்கள் ஆங்கிலத்திலேயே சொல்மாரி பொழிந்து, மக்களோடு தொடர்பு இல்லாமல், தாய் மொழியைப் பற்றி ஒன்றும் தெரியாமல் வாழ்ந்த காலம் அது. அக்காலத்து இருளில் வ. உ. சி. ஒரு மணி விளக்காக இருந்து ஒளி வீசினார். அவர் தமிழ் நூல்களை ஓயாமல் கற்று வந்தார்; பல நூல்களைப் பதித்து அச்சிட்டார்; பழைய தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர் எழுதிய உரையை முதன் முதலில் அச்சிட்டவர் அவரே; இன்றும் அதற்கு வேறு பதிப்பு இல்லை; புலவர்களே செய்யக்கூடிய தமிழ்த் தொண்டை ஒரு தேசபக்தர் செய்து முடித்தது வரலாற்றில் போற்றத் தக்க புதுமையாகும். திருக்குறள் என்ற உயர்ந்த பொது நூலுக்குப் புதுமுறையில் உரை எழுதினார். மெய்யறம் முதலான புதிய நூல்கள் பல எழுதினார். பல கடிதங்களைச் செய்யுள் வடிவில் எழுதினார். அவருடைய தேசியத் தொண்டு என்ன என்பது தெரிந்த பலருக்கு அவருடைய மொழித் தொண்டு எப்படிப் பட்டதென்பது நன்றாகத் தெரியாது. தெரிந்தால், பல ஆண்டுகள் சிறையிலே கழித்து, செக்கிழுத்தல் முதலான கடும் தண்டனைகளுக்கு ஆளானவர், பெரிய புலவராய் விளங்கி மொழித் தொண்டும் செய்ய முடிந்தது எப்படி என்று வியப்பார்கள்!

பொருளாதாரச் சுரண்டலைத் தடுக்க வேண்டு
மென்றும் தாய் மொழியைப் போற்றி அறிவை
வளர்க்க வேண்டுமென்றும் வாயால் பேசிவிட்டுத்
தேசபக்தர் எனப் பெயரெடுக்க வ. உ. சி.க்கும்
மனம் இல்லை. தாமே தம் வாழ்க்கையைப் பயி
ரிட்டுப் பொருளாதாரச் சுரண்டலைத் தடுக்க
முனைந்தார்; வருவாய் மிகுந்த வழக்கறிஞர்
வேலையை விட்டுவிட்டுத் தமிழுக்குத் தொண்டு செய்
யவும் முனைந்தார்.

பேசுதல் யார்க்கும் எளியது; பேசும் கொள்
கையின்படி நடப்பதே அரியது.

> சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
> சொல்லிய வண்ணம் செயல் (குறள்)

என்கிறார் திருவள்ளுவர். அந்த வகையில் செயற்
கரிய செயல் செய்து வெற்றி பெற்ற பெரியார்
வ. உ. சி.



# உலகத்தை ஆள....!

"பாரதி, ஓர் ஊரை ஆள ஒரு பத்திரிகை போதுமானதாயிருக்கலாம். ஆனால் உலகை ஆள 27-மொழிகளில் பத்திரிகைகள் நடத்தினால் மட்டும் போதும் என்று நினைக்கிறீர்களா?" என்று சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்பே ஒரு தமிழன், காலஞ் சென்ற கவிச்சக்கரவர்த்தி ஸ்ரீ சி. சுப்பிர மணிய பாரதியை அறைகூவிக் கேட்டார்.

எதிர்பாராத இவ்வறைகூவலைக் கேட்டு பாரதி கூட சிறிதுநேரம் திக்பிரமை பிடித்தவராகி விட் டார், ஆச்சரியத்தால்! இவ்விதம் கவிஞரைப் பதறச் செய்த-மௌனியாக்கிவிட்ட தமிழன் யார்?

தென்னாட்டில் சுதேசிக் கப்பல் கம்பெனியை —ஏன்? — சுதேசிய இயக்கத்தையே தோற்றுவித்த ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளைதான். உண் மையில் உலகத்தை ஆள ஸ்ரீ பிள்ளை அவர்கள் நினைத்தாரா? இல்லவே இல்லை — நினைத்திருக்க வும் மாட்டார். ஆயினும் உலகிலுள்ள மக்களனை வரையும் ஆள விரும்பினார் — ஆதிக்க அக்கிரமத் தினால் அல்ல; அன்பின் பெருக்கால் — நண்பின் மாண்பால். உலக மக்கள் அனைவரது உள்ளத் திலும் குடிபுக நினைத்தார். சகோதரத்துவத்தைச் சகமெங்கும் செலுத்த நினைத்தார். அந்தக் காலத் திலேயே அவர் அவ்வளவு பரந்த நோக்கமுடைய

வராக விளங்கினர். தாம் செய்யும் காரியங்கள் அனைத்தையும் உலகக் கண் கொண்டே செய்து வந்தார் ஸ்ரீ பிள்ளை. அந்தக் காலத்திலேயே அவ்வளவு தூரம் சர்வதேச வாதியாக விளங்கினர் என்பதற்கு இந்நிகழ்ச்சியே தக்க சான்ருகும்.

**அரவிந்தர் மாளிகையில் :**

புதுச்சேரியில் பகவான் அரவிந்தர் மாளிகை. மாளிகையில் தேச பக்தர்கள் பலர் ஒருங்கு கூடி உரையாடிக் கொண்டிருந்தனர். இவர்களுக்கு நடு நாயகமாக விளங்கினர் ஸ்ரீ அரவிந்தகோஷ். சிதம்பரம் பிள்ளை அரவிந்தருக்கு அருகில் உட்கார்ந்து 27-மொழிகளில் பத்திரிகைகள் ஆரம்பிப்பது பற்றிய ஒரு பெரும் திட்டத்தைப் பற்றி விளக்கிக் கொண்டிருந்தார் மிக்க சிரத்தையுடன்.

உடனிருந்த பாரதி — தம் பக்கத்திலிருந்த ஸ்ரீனிவாஸாச்சாரியாரைச் சுட்டிக் காட்டிக் கொண்டே, “பிள்ளைவாள், நாங்கள் ஒரு பத்திரிகையை நடத்த படும் கஷ்டமே சொல்ல முடியாது. நீங்கள் 27-பத்திரிகைகள் — அதுவும் 27-வெவ்வேறு மொழிகளில் நடத்தத் திட்டமிடுகிறீர்களே! அதற்கு எவ்வளவு பணம் வேண்டும்? எவ்வளவு ஆள் வேண்டும்? இடம்தான் எங்கே? இது எங்காவது நடக்கிற காரியமா?” என்று சிரித்தவாறே கேட்டார்.

திட்டத்தை விளக்கி வைப்பதில் வெகுவாக ஈடுபட்டிருந்த பிள்ளையின் காதில் இச்சொற்கள் விழுந்தனவோ — இல்லையோ; வந்து விட்டது

ஆவேசம் பிள்ளைக்கு. நாற்காலியிலிருந்தெழுந்தார். கை முஷ்டிகளை உயர்த்திக் கொண்டு ஆரம்பத்தில் குறிப்பிட்டவாறு சடசட வெனக் கர்ஜித்தார். கேட்டவர் யாரெனப் பார்த்தார். தமது 'மாமனு ரான' பாரதி. பிள்ளையவர்கள் ஆவேசம் 'கலகல' வென்ற சிரிப்பாக மாறியது. மீண்டும் நாற்காலி யில் உட்கார்ந்தார். கடல் முழுதும் கப்பல் விட நிதி திரட்டிய பிள்ளைக்கு 27-மொழிப் பத்திரிகை கள் அற்பமாய்த் தோன்றியிருக்கலாம் போலும்!

ஆனால் நம் மக்களின் துர்ப்பாக்கியமோ, தமிழ் நாட்டின் கெட்ட காலமோ – பிள்ளையவர் களின் நனவு கனவாகவே போய்விட்டது. என்றாவது மீண்டும் அவரது கனவு பலிதமாகுமோ என்னமோ?

**உரிமைப் போராட்டத்தில் நெல்லை ஜில்லா:**

நெல் கொழிக்கும் நெல்லை வளநாட்டின் சரிதமே புரட்சி பரம்பரைச் சரிதமாக விளங்கி வருகிறது. பாளையப்பட்டு மன்னர்கள் புரிந்த போர்களுக்கெல்லாம் நெல்லை ஜில்லா நிலைக்கள மாக நின்றது

'மானம் பொழியுது; பூமி விளையுது; மன்னவன் காணிக்குக் கிஸ்தி ஏது?' என மார்தட்டிப் போர் புரிந்து கும்பினிக்காரரைக் கூமுற வைத்த மன்னன் கட்ட பொம்முவின் புகழ் – விடுதலைப் போராட்டம் சரிதம் உள்ளளவும் மறையவே மறையாது.

**வக்கீல் பரம்பரையில் வந்த வள்ளல்:**

பாஞ்சாலக்குறிச்சி வம்சத்தார் அரசாண்ட காலத்தில் – பாஞ்சாலக்குறிச்சிக்கு அருகிலுள்ள ஒட்டப்பிடாரம் என்னும் ஊர் அந்த ராஜ்யத்தின் நடு நாயகமாக விளங்கியது. சுதந்திரப் போராட்டத்தில் தன்னை முதல் களபலியாகக் கொடுத்த வீரர் தானுபதிப் பிள்ளை தோன்றிய ஊர் ஒட்டப்பிடாரம்.

அப்பேர்ப்பட்ட பேறு படைத்த அவ்வூரில் வேளாளர் மரபில் உலகநாத பிள்ளை என்ற பெரியார் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தார். பரம்பரையாக வக்கீல் தொழில் பார்த்து வந்த பிள்ளையவர்கள் குடும்பத்திற்கு இன்னும் ஒட்டப்பிடாரத்தில் 'வக்கீல் பிள்ளை வீடு' என்ற பட்டப் பெயரே வழங்கி வருகிறது. இந்தப் பரம்பரையில் தான் கட்டுரையின் நாயகர் சிதம்பரம் பிள்ளை வக்கீலாகத் தோன்றினர். உலகநாத பிள்ளை எட்டயபுர சமஸ்தானத்தின் வக்கீலாக விளங்கி வந்தார்.

**சுதந்திர சூரியன் உதயம்:**

ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை, உலகநாத பிள்ளை – பரமாயி அம்மாள் திருக் குமாரராக ஆங்கிரஸ ஆண்டு, ஆவணி மாதம் 22-ம்தேதி அஸ்த நட்சத்திரத்தில் (1872-ம் வருடம் செப்டம்பர் மாதம் 5-ம் தேதி வியாழக்கிழமை) தோன்றினர். பிற்காலத்தில் பேரும் புகழும் அடைந்த பிள்ளையவர்கள் தோன்றிய அந்த வியாழக்கிழமை தமிழ் நாட்டுச்

சரிதத்தில் சுதந்திர சூரியன் உதயமான தின மாகவே கொண்டாடப்படும்.

**சிதம்பரனுர் கல்வி சுற்றமை :**

சிதம்பரம் பிள்ளை ஐந்தாவது வகுப்புவரை ஒட்டப்பிடாரத்தில் அவருக்கெனத் தோற்றுவிக் கப்பட்ட பள்ளியில் கல்வி பயின்ருர். பின்னர் அருகிலுள்ள துறைமுகப் பட்டணமாகிய தூத்துக் குடி சென்று அங்குள்ள செயின்ட் ஸேவியர் உயர்தரக் கலாசாலையில் சேர்ந்து பயின்று மெட்ரி குலேஷன் பரீட்சையில் மேன்மையுற்றுத் தேறி ஞர். அப்போது அவருக்கு வயது 19.

பிள்ளையவர்களின் தந்தையார் தமது குமார ரையும் தம்மைப் போலவே வக்கீல் ஆக்க விரும் பினுர். எனவே சிதம்பரம் திருச்சிராப்பள்ளிக்குச் சென்று அங்குள்ள சட்டக் கல்லூரியிற் சேர்ந்து 1894-ம் வருஷம் இரண்டாவது கிரேடு வக்கீலாக முதன்மையுற்றுத் தேறிப் பட்டம் பெற்ருர். பிள்ளையும் ஒட்டப்பிடாரத்தில் உள்ள சப்மாஜிஸ் டிரேட் கோர்ட்டில் வக்கீலாகச் சிறிது காலம் தொழில் நடத்தி வந்தார்.

**வக்கீல் தொழிலில் வல்லமை :**

ஒட்டப்பிடாரம் சப்மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஒரு வழக்கில் பிள்ளை வாதிக்காகவும், பிள்ளையின் தந்தையார் பிரதிவாதிக்காகவும் வழக்காடினர். அவ் வழக்கில் தம் தந்தையைப் பிள்ளையவர்கள் தோற்கடித்தார்! தந்தைக் கெதிராகத் தனயன் வழக்கிட்டு வென்றமை ஒட்டப்பிடார வட்டாரத்தில்

இன்றும் ஆச்சரியத்துடன் ஒரு 'கதை'யாக வழங்கி வருகிறது. 'இவன் தந்தை என்னோற்றான் கொல்' என்னும் சொல்லைத் தமது தந்தைக்கு வாங்கித் தந்த பிள்ளையைப் பெற்ற அவரது தந்தையார் உலகநாதப் பிள்ளை எத்தகைய பெருமை யடைந்திருப்பார்!

**லஞ்சம் வாங்கிய நீதிபதிக்குச் சீட்டு :**

சிதம்பரனார் நியாயம் எந்த இடத்தில் இருந்த தென்று கருதினாரோ அக் கட்சிக்காகவே வாதாடுவார். ஏழைகளுக்காக அநேக முறை இலவசமாக வாதாடியுள்ளார். சர்க்கார் அதிகாரிகளிடையே இருந்த லஞ்சப் பழக்கத்தை ஒழிக்க அவர் வெகு தீவிரமாக ஈடுபட்டிருந்தார். இதற்காக அவ்வப் போது ஓட்டப்பிடாரத்தில் சப் மாஜிஸ்டிரேட்டு களாக இருந்த இருவர்மீது லஞ்சம் வாங்கினமைக் காக வழக்குத் தொடர்ந்து வெற்றி பெற்றார். ஒரு வழக்கில் சப் மாஜிஸ்டிரேட் பஞ்சாபகேச அய்யர் பி. ஏ., பி. எல். என்பவர் வேலையினின்றும் நீக்கப் பட்டார். மற்றொரு வழக்கில் சப் மாஜிஸ்டிரேட் டாக இருந்த வாசுதேவ ராவ் என்பவர் லஞ்சம் வாங்கிய குற்றத்திற்காக குமாஸ்தாவாக மாற்றம் செய்யப்பட்டார். இது முதலே போலீசாருக்கும், அதிகாரிகளுக்கும் பிள்ளையைக் கண்டால் பெரும் கிலி. பிள்ளையவர்களுக்குப் போலீசார் என்றாலே பரம வெறுப்பு. எனவே போலீசாருக்கு எதிராக வழக்காடுவதில்தான் அவருக்கு அதிக விருப்பம். போலீசாரை அவர் 'பொய்நிறை பேடியர்' என்று கூறியுள்ளார். இது எவ்வளவு உண்மையானது.

**வக்கீல் தொழிலில் வல்லமை :**

போலீசார் எவ்விதமாயினும் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையை அடக்க வேண்டுமென நினைத்தனர். இதற்காக ஒருமுறை ஒரு கொலைவழக்கில் அவரைப் பொய்யாகக் கொழுவி விட்டனர். தலைக் கொழுப் பினால் அகங்கரித்து நின்ற 'ஏட்' சுப்பிரமணியம் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவ்வழக்கில் எதிரிகள் சார்பாக வாதாட பிள்ளையவர்கள் ஒப்புக் கொண்டிருந்தார். இவ்வாறு செய்யாமல் தடுப்பதற் காகவே அதே கொலை வழக்கில் சதி செய்த குற்றத்தைச் சுமத்திச் சேர்த்து விட்டனர். பிள்ளை யவர்கள் தந்தைக்கு இத்தகவல் தெரிந்தது. உடனே போலீசாரிடம் சென்று தம் மகனை வழக்கில் சேர்க்க வேண்டாமென்றும் எதிரிகளுக்காக வாதாடாதிருக் கும்படிச் செய்வதாகவும் கூறி பொய் 'மெமோ'வை வாபஸ் பெறச் செய்தார். சிதம்பரனாரும் சமயம் அறிந்து எதிரிகளுக்கு ஆஜராகாம லிருப்பதாகக் கூறி-வழக்கு நடந்துகொண்டிருந்தபொழுது தமக்கு இனி பயமில்லை என நினைத்தபொழுது - எதிரிக்காக மீண்டும் ஆஜராகி வாதாடினார். கொலை வழக்குப் பொய் என ஒழிந்தது. அதுமுதல் போலீசாரும் அடங்கினர். இவ்விதமாக இவரது வக்கீல் வாழ்க் கையில் பல அதிசய நிகழ்ச்சிகள் உள்ளன. அவற்றையெல்லாம் இங்கு கூறுவது இயலாது.

**வந்தேமாதரம்! வாழ்க சுதேசியம்!**

சிதம்பரனார் பேரும் புகழும் அடைய எண்ணி அவரது நண்பர்கள் அவரைத் தூத்துக்குடிக்கு அழைத்தனர். அவரும் அங்கு சிறிதுகாலம் வக்கீல்

தொழில் புரிந்தார். இந்த சமயத்தில்தான் சுதேசிய வித்து சிதம்பரனாரின் மனத்தில் விழுந்தது.

1905-ல் கர்ஸான் பிரபு வங்கத்தைப் 'பாகிஸ்தான்' செய்தார். அதன் விளைவு என்ன? நாட்டில் எங்கும் சுதந்திரக் கனல் வீசிற்று. அந்நிய நாட்டுச் சாமான்கள் பகிஷ்கரிக்கப்பட்டன. சுதேசியம் வளர்ந்தோங்கிற்று. சுதேசியம், சுதேசியம் எங்கும் சுதேசியம்! நாட்டு விடுதலையில் ஆர்வம் கொண்ட பிள்ளை தூத்துக்குடியில் ஒரு தரும சங்க நெசவுச் சாலை நிறுவினார். சுதேசிப் பண்டகசாலை ஏற்படுத்தினார். இப் பண்டகசாலையில் விற்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் சொந்த நாட்டில் செய்யப்பட்டவையே. இதுமுதல் பிள்ளையவர்கள் சுத்த சுதேசிய வீரராக மாறிப் பொதுக்கூட்டங்கள் கூட்டுவித்து வந்தேமாதர முழக்கம் செய்து வந்தார். சொந்த நாட்டில் பரர்க்கடிமை செய்வதைத் 'தூ'வெனத் தள்ளச் சொன்னார்.

**கப்பல் கம்பெனிக்குக் காரணம் :**

சுதேச வியாபாரிகள் அந்நிய கப்பல் கம்பெனியில் அவமதிக்கப்படுவதையும், பெரும் பொருள் இழப்பதையும் கண்ட பிள்ளைக்கு ஏன் நாமே ஒரு நாவாய்ச் சங்கம் தோற்றுவிக்கக் கூடாது எனத் தோன்றியது. பல வியாபாரிகளிடம் இதற்கெனப் பணம் கோரினார். நமது வியாபாரிகள் இத்தொழில் லாபம் தருமோவென ஐயங்கொண்டு நேரில் பொருள் தருவதாகக் கூறி 'இப்போ; பிறகு' எனக் கடத்தினர். இஃது பிள்ளைக்கு மிக்க வேதனையளித்தது.

**முஸ்லிம் வியாபாரி முன்னணியில் :**

இதற்கிடையில் அப்போது தூத்துக்குடியிலி ருந்த பக்கிரி முகம்மது ராவுத்தர் என்னும் முஸ்லிம் பெரியார் முதலில் துணிந்து கப்பல் கம்பெனிக்குப் பொருள் தந்தார். அந்நிதியையும், ஏட்டு குருநாத ஐயர் முதலியோர் தந்த நிதியையும் கொண்டு, முத லில் பிள்ளையவர்கள் சுதேசிக் கப்பல் கம்பெனி தோற்றுவித்து "ஷாலயன்," "இப்ஸ்விச்" என்ற இரு கப்பல்களை வாடகைக்கு அமர்த்தி நடாத்தினர். ஒரே மாதத்தில் கம்பெனிக்கு ரூ. 20,000 லாபம் கிடைத்தது. பின்னர் எல்லோரும் பணம் கொடுக்க முன் வந்தனர். 1905-ம் வருஷம் சுதேசிக் கப்பல் கம்பெனி நிறுவப்பட்டது. 1906 அக்டோபர் 16-ந் தேதி பதிவு செய்யப்பெற்றது. கப்பல் கம்பெனிக்கு எஸ். எஸ். காலியோ, எஸ். எஸ். லாவோ என்ற இரு கப்பல்கள் சொந்தத்தில் வாங்கப்பட்டு சிறப்புற நடைபெற்றது. பிள்ளையவர்களுக்குக் கப்பல் கம் பெனியில் நம்மவர்கள் போதிய ஆதரவு தரவில்லை என்பதே எண்ணம்.

**பொது வாழ்வில் பிள்ளையவர்கள் :**

இதன் பின்னர் பிள்ளையவர்கள் பொது வாழ் வில் பெரும் பங்கு எடுத்துக்கொண்டார். பலமுறை ஹரிஜனங்களோடு ஜாதி ஹிந்துக்களைச் சமபந்தி போஜனம் செய்யும்படி செய்திருக்கிறார். திருநெல் வேலி, தஞ்சாவூர், சென்னை, மதுரை, கூடலூர் முதலிய பல தென்னாட்டுப் பிரதான நகர்களிலும் பிள்ளையவர்களும், சுப்பிரமணிய சிவாவும் சுதேசியம் முழங்கி வந்தனர்.

**முதலில் நடைபெற்ற வேலை நிறுத்தம் :**

அக்காலத்தில் மில் தொழிலாளர்களுக்கு லீவு வசதி, வேலை நேரக் குறைவு முதலியன ஒன்றுமே கிடையாது. அவர்கள் பட்ட கஷ்டம் சொல்லும் தரமன்று. அவர்கள் சமூக ஊழியரான பிள்ளையை அணுகினர். வேலை நிறுத்தம் செய்யுமாறு பிள்ளை யோசனை கூறினார். வேலை நிறுத்தம் தோன்றி ஒரு வாரமாக நடைபெற்றது. வேலை நிறுத்த காலத்தில் பிள்ளையவர்கள்தான் தொழிலாளர்களுக்கு ஊண், உடை அளித்தனர். இதற்காகப் பிள்ளையவர்கள் தமது மனைவியாரது நகைகளை விற்பனை செய்து உணவிடவும் நேரிட்டது. பார்த்தனர், ஹார்வி மில் முதலாளிகள். நாள் ஒன்றுக்குப் பல்லாயிர ரூபாய் நஷ்டமேற்பட்டது. வேலை நிறுத்தத்தினால் பணிந்தனர் – தொழிலாளர் கோரிக்கைக்கு. 12-மணி நேரமாக இருந்த வேலை நேரம் 9-மணியாகக் குறைக்கப் பட்டது. வாரம் ஒரு முறை விடுமுறையும், இலவச வைத்திய உதவியும், சம்பளத்துடன் விடுமுறையும் கொடுக்கப்பட்டன. இந்த வேலை நிறுத்தம்தான் தென்னாட்டிலேயே முதன் முதல் நடைபெற்ற வேலை நிறுத்தம் எனத் தெரிகிறது.

**சூரத் காங்கிரஸ் :**

பிள்ளையவர்கள் அரசியல் வாழ்வில் தீவிர முற்போக்குடைய திலகர் கட்சியைச் சேர்ந்தவர். 1907-ல் நடைபெற்ற சூரத் காங்கிரஸில் திலகருக்குப் பேராதரவாக இருந்த இருவர் சுப்ரமண்ய பாரதியும், சிதம்பரம் பிள்ளையுமே யாவர். அப்பொழுதுதான் பிள்ளையவர்களுக்கு அரவிந்தகோஷ், லஜபதிராய்

முதலிய பல தலைவர்களுடன் தொடர்பு ஏற்பட்டது. சூரத் காங்கிரஸுக்கு தூத்துக்குடியினின்றும் சென்னை வழியாக நேரே சூரத் நகருக்கு ஸ்பெஷல் ரயிலில் அமிதவாதிப் பிரதிநிதிகள் சென்றமை குறிப்பிடத்தக்கது. இம் முயற்சிகளுக் கெல்லாம் காரணகர்த்தா பிள்ளையேதான்.

**வெள்ளையர் வெளியேறினர்!**

பல வகையிலும் நாட்டுமக்கள் முன்னேறி வருவதைக் கண்ட தூத்துக்குடி வெள்ளையர் வெருண்டனர். நகரில் இருக்கப் பயந்து தூத்துக்குடிக்கு அருகிலுள்ள முயல் தீவில் இரவைக் கழிப்பதும், பகலிலும் பந்தோபஸ்துடன் ஊருக்கு வந்து போவதுமாயிருந்தனர். வெள்ளைக் கப்பல் கம்பெனிக்குப் போட்டி ஏற்பட்டது கண்டும், பொங்கி வரும் சுதேசி வேகத்தைக் கண்டும் ஆங்கிலேயர் ஆர்ப்பரித்து பிள்ளையையும், அவரது சகாக்களையும் ஒழித்துவிட முடிவு கட்டினர். வெள்ளை அரசாட்சியும் அவர்களுடன் சேர்ந்து கொண்டு அடக்கு முறைப் பேயாடியது.

**ராஜத்துவேஷ வழக்குத் தொடரப்பட்டது:**

1908-ம் வருடம் மார்ச் 9-ந்தேதியன்று பிள்ளை மீது ராஜத்துவேஷ வழக்குத் தொடரப்பட்டது. அதே வருடம் பல இடங்களிலும் பிப்ரவரி 23, 26, மார்ச் 1, 3 ஆகிய தேதிகளில் பேசிய பிரசங்கங்கள் எல்லாம் ராஜத்துவேஷமானவை என சர்க்கார் வழக்குத் தொடங்கினர். மார்ச் மாதம் 11-ந்தேதி பிள்ளை, சிவா, பத்மநாப ஐயங்கார் ஆகியோர்

கைது செய்யப்பட்டனர். தலைவர்கள் கைது செய்யப்பட்டது பற்றி ஏற்பட்ட ஆத்திரத்தில் நெல்லையிலும், தூத்துக்குடியிலும் பெரும் கலவரங்களும், நாச வேலைகளும் நடைபெற்றன. வெள்ளையர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்து நம் மக்களின் உயிரையும் உதிரத்தையும் குடித்தனர். மக்களின் ரத்தம் அடக்குமுறைத் தாண்டவத்தால் கொதித்தது. ஆம்! புகைகூட விட்டது!

**சட்டத்தில் இல்லாத இரட்டை தண்டனை:**

இந்த ராஜத்துவேஷ வழக்கை விசாரிப்பதற்கென்றே தனியாக நியமிக்கப்பட்ட அடிஷனல் செஷன்ஸ் ஜட்ஜ் பின்னே (A. F. Pinhey) சிதம்பரனருக்கு இரு குற்றங்களுக்கும் இரண்டு ஆயுள் பரியந்த தீவாந்திர தண்டனையும், சிவாவுக்குப் பத்து வருட தீவாந்திர தண்டனையும் விதித்தார்.

அப்பீலில் பிள்ளையவர்கள் தண்டனை ஆறு வருடமாகக் குறைக்கப்பட்டது. பிள்ளையவர்கள் தமது தண்டனையில் பெரும் பகுதியைக் கோயம்புத்தூர் சிறையிலும், கொஞ்ச நாள் கண்ணனூர்ச் சிறையிலும் கழித்தார்.

**தமிழாராய்ச்சி:**

சிறையிலிருந்த காலையில் சிதம்பரனர் தமிழ் மொழி முன்னேற்றத்தில் வெகுவாக ஈடுபட்டிருந்தார். சிறையிலேயே 'மனம் போல வாழ்வு,' 'மெய்யறம்,' 'மெய்யறிவு' முதலிய நூல்களை எழுதியுள்ளார். தெய்வ நூலாகிய திருக்குறளுக்கு இவர் ஒரு உரை எழுதியுள்ளார். ஆங்கிலத்தில்

திருக்குறளை உரையுடன் மொழிபெயர்க்க முயன்றார். இவ்வெண்ணம் என்ன காரணத்தினாலோ நிறைவேறாது போயிற்று. பிள்ளையவர்கள் தமிழில் பல நூல்கள் இயற்றியுள்ளார்.

சுவாமி வள்ளிநாயகம் என்பவரின் உதவி கொண்டு பிள்ளையவர்கள் 'விவேக பாநு' என்ற தமிழ் மாதாந்திர சஞ்சிகையை நடத்தி வந்தார். 'இந்துநேசன்' பத்திரிகைக்குச் சிறிது காலம் ஆசிரியராகவும் இருந்திருக்கிறார்.

**விடுதலை! விடுதலை! விடுதலை!**

1912-ம் வருடம் டிசம்பர் மாதம் தமது தண்டனையைக் கழித்து விட்டுப் பிள்ளையவர்கள் கண்ணனூர்ச் சிறையினின்றும் விடுதலையானார். 1922-ம் வருடம் மீண்டும் வக்கீலாக கோவில்பட்டியில் தொழில் நடத்தி வந்தார். சிறையிலிருந்து விடுதலையானவுடன் வறுமைப்பட்ட பிள்ளை நெய் வியாபாரம், அரிசி வியாபாரம் முதலியனவும் செய்து வந்தார். திலகர் பெருமான் அக்காலத்தில் தமது சிஷ்யரான சிதம்பரம் பிள்ளைக்கு மாதா மாதம் ரூ. 50 வீதம் அனுப்பி உதவி புரிந்தார். இச்சமயத்தில்தான் காந்திஜியும் தென்னாப்பிரிக்காவில் நிதி திரட்டிப் பிள்ளையவர்களுக்கு உதவியது குறிப்பிடத் தக்கது.

**நன்றி மறவாமை!**

தமது குடும்பத்திற்குப் பெரிதும் உதவி செய்த சி.த. ஆறுமுகம் பிள்ளை என்பாரின் பெயரைத்

தமது இரண்டாவது குமாரருக்கு இட்டிருக்கிறார். தில்லையாடி வேதியப்பப் பிள்ளை செய்த சேவை காரணமாகத் தமது இரண்டாவது குமாரிக்கு வேத வல்லி எனப் பெயரிட்டிருந்தார். தமது நண்பர் நெல்லை ஞானசிகாமணி முதலியார் தமக்குத் தமிழ் கற்றுக் கொடுத்ததின் ஞாபகார்த்தமாக மூத்த குமாரிக்கு ஞானவல்லி என்றும், கோவை வழக் கறிஞர் சி. கே. சுப்பிரமணிய முதலியார் தமது வழக்குகளில் வாதித்தமைக்காகத் தமது மூன்றா வது குமாரருக்குச் சுப்பிரமணியனென்றும், சிறை யின்றும் வந்த பின் மீண்டும் வக்கீல் வேலை வாங்கித் தந்த தம் ஆங்கில நண்பர் வாலஸ் துரை மகனார் ஞாபகார்த்தமாகத் தமது கடைசி குமார ருக்கு வாலேஸ்வரன் என்றும் பெயரிட்டுள்ளார். இவற்றிலிருந்து அவரது செய்நன்றி மறவாமை தெற்றென விளங்கும்.

**உலகினின்றும் மறைவு.**

வ. உ. சிதம்பரம் பிள்ளை தமது பிற்காலத்தில் வக்கீல் தொழிலை விட்டு விட்டார். வக்கீல்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது பிள்ளையவர்கள் 'வக்கீலாய் நின்று வழிப்பறியே செய்கின்ற திக்கிலார்' எனக் கூறியுள்ளார். கடைசிக் காலத்தில் தமிழன்னைக்குத் தொண்டு செய்வதையே கொண்டு அரசியல் வாழ்வினின்றும் வறுமை காரணமாகவும், கொள்கை வித்தியாசம் காரண மாகவும் விலகி நின்ற பிள்ளையவர்கள் 1936-ம் வருடம் நவம்பர் மாதம் 18-ந் தேதி இரவு 12 மணிக்குத் தூத்துக்குடியில் காலமானார். தற்போது

பிள்ளையவர்கள் குமாரர்கள் ஆறுமுகம் பிள்ளை, சுப்பிரமணியம், வாலேஸ்வரன்; குமாரிகள் மரகத வல்லி, ஆனந்தவல்லி, வல்லியம்மை ஆகியோர் வாழ்ந்து வருகிறார்கள்.

குறிப்பு: இக் கட்டுரையின் ஆசிரியர் திரு. வ. உ. சி. சுப்பிரமண்யம் வ. உ. சிதம்பரம் பிள்ளையின் புதல்வர்களில் ஒருவர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். தற்போது தினமணிப் பத்திரிகையில் இவர் உதவி ஆசிரியராக இருக்கிறார்;

# கப்பல் ஏறுவாயோ?

'முத்துக் குளிப்பதொரு தென் கடலிலே
மொய்த்து வணிகர் பல நாட்டினர் வந்தே
நத்தி நமக்கினிய பொருள் கொணர்ந்தே
நம்மருள் வேண்டுவது மேற் கரையிலே'

என்று பாரதியார் பாரத நாட்டின் பெயர் சொல்லிப் போனார்; எனினும் இது நமது பழம் பெயர் தான். சீனத்துப் பட்டும், அராபிக் குதிரையும், சேரத்துத் தந்தத்துக்கும், குடகுமலை மிளகுக்கும், கொற்கையின் வலம்புரிக்கும் மாறு கொடுத்து வாணிபம் நடத்திய வரலாறு ஏட்டுச் சுரையாகி விட்டது; கடல் கடந்து கடாரம் வென்று சாவகத்தில் கோவில் கட்டிய தமிழரின் பெருமை பொய் யாய்ப் பழங்கதையாய்ப் போயிற்று. மணிமந்திரத் தீவு மணிமேகலையோடு போய்விட்டது. மூங்கி மூக் குளித்து தரள மணி வெள்ளம் அள்ளிய தமிழரின் கைகள் இன்று குழாய்த் தண்ணீரின் கண்ணீர்ச் சொட்டுக்குச் சொம்பேந்தி நிற்கின்றன. மாஜிப் பெருமைகளைப் பேசிப் பயனில்லைதான். "சென்றதினி மீளாது மூடரே" என்ற சொல் பாரதியாருக் கும் தான். ஆனல் இலக்கிய மறு மலர்ச்சியின் முன்னேடியாக விளங்கும் பாரதியார், சென்றதை நினைத்து வருந்தும் அழுகணிச் சித்தனக இருக்க முடியாது. அப்படியானுல், அவர் ஏன் நமது மாஜிப் புகழைப் படியளந்து கொட்ட வேண்டும்? "மூத்த

குடியாள் காலத்திலே" என்று பொக்கை வாய்த் தத்துவம் பேசும் வரட்டுப் பாதையில் ஏன் திரும்ப வேண்டும்? அதற்கும் காரணமில்லாமலில்லை.

பழம் பெருமை பேசுபவர்கள் இரு தரத்திலும் தான் இருப்பார்கள்; ஆனால் அவர்களது கண்ணோட்டம்தான் வேறு. பழம் பெருமையைப் பேசி, அந்த சொப்பன சுகத்திலே இன்பம் காணுவது, அதாவது பசித்தவன் பழங் கணக்கைப் புரட்டுவது போன்ற அழுமூஞ்சிப் பிற்போக்காளர்களும் உண்டு. நலிந்துபோன இன்றைய நிலையைக் காயகல்பம் செய்து வலுவேற்றி முறுக்கேற்றி புதிய சமுதாயத்தைச் சிருஷ்டிக்க பண்டைப் பெருமையை அஸ்திவாரமாக, நம்பிக்கையாக எடுத்துக் கூறி விளக்கும் முற்போக்குவாதிகளும் உண்டு. பாரதியார் இதில் இரண்டாவது வர்க்கத்தைச் சேர்ந்தவர்; இந்த இரண்டாவது வர்க்கத்தில் பாரதியாரைப் போலவே மஹாத்மா காந்தியடிகளும், வ. உ. சிதம்பரம் பிள்ளையும் இடம்பெறத் தக்கவர்கள்.

உலகமெலாம் இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டுக் கிடக்கும் எந்த நாட்டையும் மறுமலர்ச்சியின் மூலமாய்த்தான் 'தட்டியெழுப்ப முடியும். பண்டிதர்களின் கையில் சிக்குண்டு பரிதபித்தத் தமிழை, எளிய இனிய பாடல்களை, அதிலும் தேசியப் பாடல்களைப் பாடி இலக்கியத்தில் மறுமலர்ச்சியை உண்டாக்கியவர் பாரதி. அதுபோலவே நமது நாட்டில் சுதேசிய மறுமலர்ச்சியை உண்டாக்கியதில் காந்திஜிக்கும், வ. உ. சி. க்கும் இடம் உண்டு. காந்திஜி

ஆரம்பித்துவைத்த கைராட்டை இயக்கம் எப்படி சுதேசிய மறுமலர்ச்சியை உண்டாக்கி விட்டதென் பதை உணர்ந்து கொண்டால், வ. உ. சி. விட்ட கப்பல் அதே மறுமலர்ச்சியை உண்டாக்கிய விதத் தையும் புரிந்து கொள்ளலாம். ஆவியந்துகில், எலி மயிர்ப்பட்டு, டக்கா மஸ்லின் முதலிய துணிகளை நெய்த கரம்தான் கதரையும் நெய்தது. ஆனால் அந்தக் கதரில் அடங்கியிருந்த உண்மை மிகவும் நுண்ணியதே. கைராட்டையைக் கொண்டு வெள்ளை யனை வெளியேற்றிவிட முடியுமென்றோ அல்லது லங்காஷயரின் 80-ம் நெம்பர் துணியைத் தோற்கடி த்து வெற்றி கொள்ளலாமென்றோ காந்திஜி கனவு கண்டிருக்க முடியாது. ஆனால், பண்டை நெசவுத் தொழிலின் பெருமையை நினைவூட்டி, நமது நாட்டில் நெய்த துணியை வற்புறுத்துவதில், அது முரட்டுச் சாக்கு மாதிரியே இருப்பினும், அதை ஆதரிக்க வேண்டுவதில் உள்ள அர்த்தம் மக்கள் மனதில் சுதேசிய உணர்ச்சியைக் கிளப்புவதுதான்.

அதுபோலவே, சிதம்பரம் பிள்ளை தூத்துக்குடி க்கும் கொழும்புக்கும் விட்ட கப்பல் "சப்த சமுத்தி ரங்களின் மகாராணி" எனப் பெயர்பெற்ற பிரித்தா னியரைக் கப்பல் தொழிலில் வெல்லுவதற்கு அல்ல; வெல்லவும் முடியாது. அவர் விட்ட கப்பல் வியாபார ஏற்றுமதிக் கப்பல் அல்ல; ஆனால் அந்தப் போட்டிக் கப்பல் முயற்சியால், வெள்ளையரின் ஆட்சியைக் கப்பல் ஏற்ற நினைத்தார். சுதேசிய உணர்ச்சியை அந்தச் சிறு காரியத்தால் தூண்டிவிட்டால், அது தானகவே வெள்ளையரைக் கப்பலேற்றிவிடும் என்ற

மறுமலர்ச்சித் தத்துவத்தை உணர்ந்திருந்தார் அவர். ஆகவே காந்தியைப் போலவே வேறு விதத்தில், அதிலும் துணிகரமான முறையில் கப்ப லோட்டிய தமிழன் வ. உ. சி.யை நாம் ஒரு சுதேசிய மறுமலர்ச்சிக்காரர் என்றே கொள்ளவேண்டும்.

வ. உ. சி.யைப் பற்றி நினைவுகூரும் இந்நாளில், நாம் இந்தியாவின் கடல், கப்பல் சாதனங்களைப் பற்றி மேலோட்டமாகத் தெரிந்து வைத்துக்கொண் டால்தான், சுதந்திர இந்தியத் திட்டம் வ. உ. சி. தொடங்கிய பணியை எவ்வாறு நடத்திவைக்க இய லும் என்பதைச் சிந்திக்க முடியும்.

இந்திய நாடே ஒரு பெரிய உபகண்டம்தான்; இந்தியக் கடற்கரையின் நீளம் சுமார் 4500 மைல் ஆகும். இந்தியக் கடற்கரைப் பிரதேசங்களில் நடைபெறும் சரக்குப் போக்குவரத்தைக் கவனித் தால் சுமார் எழுபது லட்சம் டன் அரிசி, தேக்கு, நிலக்கரி, உப்பு, எண்ணெய் முதலியவை கணக் கில் அடங்கும். அதுபோலவே, மேற் கரையில் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் தொகை சுமார் பதினைந்து லட்சமாகும்; கீழ்க் கரையில் பர்மா வுக்கும் இந்தியாவுக்கும் சென்றுவரும் பிரயாணி களும் ஐந்து லட்சம் பேராகும். கடல் கடந்து செல் லும் சரக்கும் 25-லட்சம் டன் எடை பெறுமான தாகும்; அதுபோலவே அக்கரைச் சீமை நாடி அயல்நாடு செல்லும் பிரயாணிகள் தொகையும் இரண்டு லட்சத்துக்குக் குறைவில்லை. வியாபாரார்த் தமாக அக்கரைச் சீமையோடு இந்தியா கொண்

டுள்ள பொருளாதாரத் தொடர்பும் சுமார் நானூறு கோடி ரூபாய் மதிப்புடையதாகும். இந்திய நாடு கப்பல் துறையில் இத்தனை தூரம் ஈடுபட்டிருந்தும் கூட, இந்தியக் கப்பல் முதலாளிகள் இவற்றில் இருபதில் ஒரு பங்குகூட நடத்தப் பெறவில்லை. எல்லாம் அயல்நாட்டு ஆதிக்கம்தான்.

17-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரித்தானியர் நாலு கப்பல்களோடுதான் வந்து சேர்ந்தார்கள்; ஆனால் நாளடைவில் நூற்றுக் கணக்கான நாவாய்களும் மரக் கலங்களும் படைத்திருந்த இந்தியாவில், இந்தியக் கப்பல் ஒன்றுகூட இல்லாமல் செய்து, தமது ஆதிக்கத்தை நிலை நாட்டினார்கள். எனினும் இந்தியக் கப்பல் இதனை யெல்லாம் எதிர்த்து வாழவே பாடுபட்டது. ஆனால் 19-ம் நூற்றாண்டின் இறுதியில் பிரிட்டிஷார் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசியல் அதிகாரத்தின் மூலம் நமது கப்பல் கட்டும் தொழிலையும் முறித்து, இந்தியக் கப்பல்களையும் பறித்துக் கொண்டார்கள். இந்தியக் கப்பல் தொழிலை முறியடிக்க அவர்கள் செய்த சதிக்கு அரசாங்கமும் பின்னிருந்து ஐந்தாம் படையாக உதவி செய்தது; இந்தியர்களின் கோரிக்கையை மறுத்தது. வெள்ளை ஆட்சிக்கு வீதி சமைத்துக் கொடுத்தது. கட்டண விகிதத்தில் தாறுமாறாகச் சீர்குலைவு செய்து இந்தியாவைக் கவிழ்த்தனர்; வங்காளத்துக் கப்பல் கம்பெனிக்குப் போட்டியாக, பிரிட்டிஷ் கம்பெனிகள் தமது கட்டண விகிதத்தை எட்டணாவரை கூடக் குறைத்தது. தனக்கு ஒரு கண் போனாலும்

எதிரிக்கு இரண்டு கண்ணும் போகவேண்டுமென்ற தத்துவம்தான் நோக்கம். வங்காளக் கம்பெனியைப் போலவேதான் வ. உ. சி. ஆரம்பித்த கப்பல் முயற்சியும் கம்பெனியாரால் தகர்க்கப்பட்டது. வ. உ. சி. தேசியத்தின் பேரால் கப்பல் தொழிலை ஆரம்பித்தது போலவே பல முயற்சிகள் நடந்தன. எனினும் அவையெல்லாம் வெள்ளையரின் நயவஞ்சகத்தால் நசுக்கப்பட்டு விட்டன.

அரசியல் விடுதலைபெற்ற இந்தியாவில் வாழும் நாம் இந்தியக் கப்பல் தொழிலை எந்த விதத்தில் முன்னேற்ற வேண்டும் என்பதைச் சிந்திக்க வேண்டும்; அப்போதுதான் வ. உ. சி. போன்ற தியாகிகள் ஆரம்பித்து வைத்த பணியை நிறைவேற்றுவதாகும். இன்று பெரும்பாலான இந்தியக் கப்பல்கள் ஸிந்தியா நேவிகேஷன் கம்பெனியாராலேயே நடத்தப்பெறுகின்றன; சமீபத்தில் பிரபலமடைந்த ஜல உஷாவும் அவர்களது கப்பலே.

ஆனால் கப்பல் தொழிலின் மூலம் வியாபார ஆதிக்கம், அதாவது இன்றைய நிலையில் முதலாளிகள் ஆதிக்கம் வளரக் கூடுமாதையால், சுதந்திர இந்திய கப்பல் தொழிலை முதலாளிகள் வசம் விட்டு வைக்காது தேசிய மயமாக்கவேண்டும்; அப்போது தான் அவை நாட்டின் நலத்துக்காக உழைக்க முடியும்; பேரளவிலும் உயர முடியும்; அப்படிச் செய்தால்தான் நாம் மீண்டும் கடாரத்துக்கும், சாவகத்துக்கும் செல்லலாம். கொடி நாட்டுவதற்கு அல்ல; கூடிக் குலாவுவதற்கு.

கப்பல் ஏறுவாயோ? – அடிமை

கடலைத் தாண்டுவாயோ? – என்று

அன்று வ. உ. சிதம்பரம் பிள்ளையைப் பார்த்துக் கேட்ட வெள்ளையன் சொல்லுக்கு இன்று இந்திய சர்க்கார்தான் பதில் அளிக்க வேண்டும். இதுவே எனது ஆசை.



# பிள்ளையின் பெருமை.

நாவலர் திரு. சோமசுந்தர பாரதியார்.

‘தென்னாட்டுத் திலகர்’ எனப் புகழ்ப் பேர் பூண்ட காலஞ் சென்ற திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களைப் புதிய இந்தியா முழுவதும் அறியும். குடிமையறமும் உரிமையும் துறந்து, மக்கள் ‘அடிமை மோகத்தில்’ ஆழ்ந்து மடிந்து இருந்த காலத்தில், தாய்நாடு முற்றுரிமை பெற்றுயர முதலில் முயன்ற பெருந் தலைவருள் ஒருவர் இப் பெரியார்; தென்னிந்திய உரிமைப்போர் மறவருள் முதல்வர்.) இவர் தமிழகத்தில் தனக்கென வாழாப் பிறர்க்கு உரியாளராய், பொதுநலம் பேணப் பிறந்த பெரியார். இளம் பருவமுதல் அஞ்சா நெஞ்சராய் பெருமையும் உரனும் பிறங்க வளர்ந்தவர். ஆங்கிலமறியாமல், ஓங்கு புகழோடு வக்கீல் வேலை பார்த்த உலகநாத பிள்ளையவர்களின் புதல்வர். ஒட்டப்பிடாரம் தூத்துக்குடி ஊர்களில் குற்ற நீதி மன்றங்களில் திறம்பட வாதுபுரிந்து, பொருளும் புகழும் செல்வாக்கும் பெருக வாழ்ந்த தமிழ்வாணர்.

காளைப் பருவத்தில் ‘தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்து’ வாழ்ந்தார். கூர்த்தமதியும் சீர்த்த நடுநிலை உணர்வும் வாய்ந்த வழக்கறிஞர். வள்ளுவர் குறளும் கைவல்ய நூலும் பல்காற் பயின்று, சொல் வன்

மையும், நல்லியல்பும் நிரம்பி, கற்றோர் களிக்க மற்றோரும் மகிழச் சல்லாபிக்க வல்லவர். நேர்மை நிறைந்த அதிகாரிகளை நட்டு, அறம் திறம்புபவர் அஞ்ச மறத்தோடெதிர்த்து, எளியாரை ஆதரிக்கும் தறுகணாளர். அறிவொடு முரணும் குருட்டுக் கொள்கைகளை அறவாதத்தாலடர்த்து, சமுதாயச் சீர்திருத்தங்களில் முனைந்து நின்றவர். தென்னாட்டுத் தேசத்தொண்டர் முன்னணியில் முதலிடம் கொள்ளும் பெருமை பெற்றவர். ஆசுகவி அரசரான கந்தசாமிக் கவிராயர், மதிநுட்பம் நூலோடு சிறக்க வாழ்ந்த அரசஞ் சண்முகனார் போன்ற புலவருக்கும், நிதிக் கிழவரான செல்வருக்கும் நண்பர். சூரத்துக் காங்கிரசில் திலகரோடு சேர்ந்து தேர்தலுரிமையைப் பேராது காத்த வீரர்.

இந்தியநாட்டில், பெருங்கடலோடும் கப்பல்களை அந்நியர் ஆதிக்கமின்றி நம்மவர் முதலால் ஓட்ட நினைத்து, முதன்முதலில் பொருள் திரட்டி, 'சுதேசி நீராவிக் கப்பல்' கம்பெனி கூட்டிய தனிப்பெருமை இவருடைமை. வாணிப யாத்திரை மரக்கலக் கம்பெனிகளிலெல்லாம், உலகத்திலேயே பெரிதான பிரிட்டிஷ் இந்தியன் நீராவிக் கப்பல் கம்பெனியாரோடு போட்டி செய்து, தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே, ஆங்கிலர் கலங்களில் ஆளும் சரக்கும் ஏறாதபடி வெற்றி கண்டார். தலைக்கு $3\frac{1}{2}$ ரூபாய்க் கட்டணத்தை 4-அணா ஆக்கியும், சரக்கு ஏற்றுமதிக் கூலியை காலிலொன்றாய்க் குறைத்தும், அதிகாரிகளினுதவி ஆதரவு முற்றும் பெற்றும் ஏறாமல், பிள்ளையவர்கள் கம்பெனிக் கப்பலில்

முழுக் கட்டணதாரனே கொடுத்து நம்மவர் எல்லா ரும் போக்கு வரவு செய்ய வைத்த அரிய வினைத் திறம் – பிள்ளையவர்களின் மதிவலியும், முயற்சித் திறமும், மக்கள் மதிப்பும் காட்டும் நல்ல சான் ருகும். ஒற்றுமையில்லாத நம்மவரை ஒரு மனத்த ராய் ஒழுகவைத்த இவர்களின் தேசத் தொண்டை வியவாத வெள்ளையர்களில்லை என்ருல், இவர்கள் பெருமைக்குப் பிறசான்று தேடுவானேன்? நட்ட மும் தோல்வியும் நாள்தோறும் பெருகக் கண்டு புழுங்கிக் கொதித்து, பிள்ளையவர்களைப் புகழ்ச் சிறைப் படுத்தி, கப்பல் கம்பெனியையும் உலையச் செய்த அதிகாரிகளின் சதியாலோசனை, கொடுமை கள் முனிவரையும் முனியச் செய்யும். பிள்ளையவர் களுக்கு ஜன்மச் சிறை விதித்த ஆங்கில நீதிபதின் கொடுமைக்கும், இழிவுணர்ச்சிக்கும் அக்காலத்திய இந்திய மந்திரியான மார்லிப் பிரபு வெட்கப்பட்டு, உயர்நீதி மன்ற அதிபர் வேலைக்கு உத்தரவு பெற் றிருந்த ஆங்கிலேயரை அவ்வுத்தரவை மாற்றி அவர் ஆயுள்வரை நீதிபதி வேலைக்கே அருகரில்லை என விலக்கின செய்தி உலகறிந்த உண்மை.

இப்பெருங்குணச்செல்வர் சிறையிற்பட்ட அல் லல்களுக்கு எல்லையில்லை. கொசுவலைக் கட்டிலொடு வேண்டுணவு கொண்டு சுகவாழ்வு கொள்ளும் தற் காலத் தேச அன்பர் மேல்வகுப்புச் சிறைவாசம் அக்காலமறியாதது. கொலை, வழிப்பறிக் குற்ற வாளிகளுக்கிடையே அவர்களுக் கொப்ப, கல் லுடைப்பு – செக்காட்டல் – மண் வெட்டு முதலிய கடுமையான வேலைகளைச் செய்து, சவுக்கடிபட்டு, கேப்பைக் கூழ் கறியின்றி சட்டியில் வாங்கியுண்

னும் கொடுங் குற்றவாளிகளின் வாழ்வு பிள்ளையவர்களின் சிறைவாசம். அதுபோதாமல், தண்டனை அவதி கடந்த பின்னும் முன்னைய வக்கீல் தொழில் செய்ய வொட்டாமல் வறுமையும், கவலையும் வழங்கப்பட்டனர். உடல் நலிவும், உளத் தளர்வும் இடையறாத் துணையாக, எஞ்சிய கால முழுதும் இருந்து இறைவனடி சேர்ந்த வள்ளல் இவர். தமிழர் புத்துணர்வும் நல்வாழ்வும் எய்த வழிவகுத்து வாழ்ந்த இப்பெரியாரை வழுத்தாத நாளெல்லாம் தமிழருக்கு வீணாளாகும்.



# சுதந்திர அஸ்திவாரம்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன் பினங்கு துறை முகத்தில் ஒரு படகில் சில நண்பர்களுடன் போய்க் கொண்டிருந்தேன்; அது நாட்டுப் படகு. அதை ஓட்டிய நபர் ஒரு வயோதிக முஸ்லிம். காயல் பட்டணத்தைச் சேர்ந்த தமிழர். சற்று வாயைக் கிண்டியதும் தமது வாழ்க்கைச் சரிதையை ஒப்பு வித்துவிட்டார். "தண்ணிப் பளக்கம் நெடு நாளா உண்டு. அந்த மகான் செதம்பரம் பிள்ளை மொதல்லே இளுத்து உட்டாரு. அவர் காலமாயிட் டாராமே?" என்று படகோட்டி வருத்தக் குரலில் கேட்டார். கப்பலோட்டிய முதல் தமிழனின் கீழ்ப் பணியாற்றி மலேயாவில் இன்று வயிறு கழுவிக் கொண்டிருக்கும் தமிழர்கள் ஒரு சிலர் இருப்ப தாகவும், குளிர்ந்த வேளையில் அவரைத் தினமும் நினைத்துக் கொள்ளுவதாகவும் அந்தப் படகோட்டி மனமுருகச் சொன்னார். "திரை கடலோடியும் திர வியம் தேடு" என்ற முதுமொழிப்படி கப்பலோட்ட வ. உ. சி. முன் வரவில்லை. நாட்டின் விடுதலைத் திருப்பணியின் ஒரு அம்சமாகவே அவர் அக்கடமை யில் இறங்கினர். கடலாதிக்கங் கொண்ட உலக நாடு களில் இந்தியா மிகப் பழையது. நமது நாகரிகம் எக் காலத்திலும் பிறருக்குத் தீங்கு நினையாதது. எனவே வாணிபப் பெருக்கிற்காகவும், நமது கலைப் பண்பின் வளர்ச்சிக்காகவும் மட்டுமே கப்பல்

தொழிலை நமது முன்னோர் பயன்படுத்திக் கொண்டனர். மஜ்ஜாபஹீத், ஸ்ரீவிஜயம், பாண்டுரங்கம் போன்ற (இன்றைய இந்தோனேஷியா) பஞ்சத்வீபங்களுக்கும், காம்போஜத்துக்கும் (ஸயாம்,) சீனவுக்கும், ஜப்பானுக்கும், தென் அமெரிக்காவின் மேற்குப் புறமுள்ள சில்லி தேசத்துக்கும் நமது கலைகளும், கல்வி கேள்விகளும், சம்பிரதாயங்களும் முந்நாளிற் பரவி நிலைத்தன. ஆனால் அவற்றை நாம் அடிமைப்படுத்தி அரசுரிமை கொண்டாடவில்லை.

நமது தருமம் அத்தகைய ஆக்கிரமிப்புக்கு அடியோடு புறம்பானது. ஆனால் நாம் உச்ச நிலையைக் கடந்து, உள்நாட்டிலேயே ஐக்கியங் குலைந்து, சிதறுண்டு போக ஆரம்பிக்கையில் ஐரோப்பிய வல்லரசுகள் கடல் கடந்து வியாபிக்கலாயின. அவற்றிற்குத் தார்மிக சம்பிரதாயமெதுவுமில்லை. எனவே வாணிபம் செய்ய வந்து நாடு பிடித்து, பிளவைப் பெருக்கி, 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்ற நியதிப்படி, பழைய சமூகங்களை அடிமைப் படுத்தி ஆளலாயின. தொன்றுதொட்டு வரும் அந்த நாகரிகங்களின் ஆத்மாவைச் சிதைப்பதில் அவை அக்கரை காட்டியது இயல்பே. ஆங்காங்கு தொழில்களைக் கருவறுத்ததுடன், தங்கள் மூலமாயின்றி வேறு வகைகளில் வெளியுலகுடன் எவ்விதமான தொடர்புமில்லாதபடி அவை செய்தன. நாட்டுத் தொழில்களும் போய், வர்த்தகக் கப்பற் படையும் போனபின், அடிமைவாழ்வு என்ற சருக்கு மரத்தில் நாம் வேகமாகச் சரிந்து கீழ் நிலையை அடைய வேண்டியதாயிற்று.

அடிமைப் படுத்திய அந்நியனின் தொழில்களைப் பகிஷ்கரித்து சுதேசித் தொழிலை விருத்தி செய்வதை விடுதலைப் போரின் முதல் ஆக்க வேலையாக்கிக் கொண்டார் மகாத்மா. அதன் விளைவாக நாட்டில் பல பெரிய தொழில்கள் தோன்றி உரம் பெற்று வளர்ந்தோங்கி யுள்ளன. அதே மாதிரி வர்த்தகக் கப்பற் படை இருந்தால் மட்டுமே நாம் வெளியுலகுடனிழந்த தொடர்பை மீண்டும் அமைத்துக்கொண்டு, உலக ஆதரவையும் வர்த்தக உறவையும் பெற்று விரைவில் சுதந்திரமடைய முடியும் என்பது வ. உ. சி. க்குத் தெள்ளெனப் புலப்பட்டது. கழுத்தறுக்கும் பிரிட்டிஷ் போட்டி என்ற அலை கடலில் எதிர் நீச்சுப் போட்டார். அதில் தோல்வியுற்றது அவரது குறையல்ல. மற்ற துறைகளில் சுதேசி இயக்கத்திற்குப்போல இதற்கும் பேராதரவு கிடைத்திருந்தால் அவரது முயற்சி பலித்திருக்கும். இன்றுகூட அவர் அறிவுறுத்திக் காட்டிய வழி முற்றிலும் பொருத்தமாகவே இருக்கின்றது. நாம் சுதந்திர அரசியலை வகுத்துக்கொண்டு புதுவாழ்வில் இறங்கும் முயற்சியில் வெற்றி பெறலாம். ஆனால் சொந்தமாக வர்த்தகக் கப்பல் பலமும், அதன் பின்னால் போர்க் கப்பல் பலமும் ஏற்படும் வரை புதிய சுதந்திரம் பத்திரமாக இராது.

# செய்ந்நன்றி மறவாச் செம்மல்.

தாய்த் திருநாட்டுக்கும் தாய் மொழியாகிய தமிழ் மொழிக்கும் தலைசிறந்த தொண்டாற்றிப் பூதவுடலை நீத்துப் புகழுடம்பெய்திய திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளை, தூங்கிக் கொண்டிருந்த தமிழ் மக்களிடையில் ஒரு புத்தம் புதிய உணர்ச்சியை, நாட்டுப் பற்றை, சுத்தச் சுதேசியத்தை, அன்னியத் துணி விலக்கை, ஒற்றுமையை உண்டாக்கிய தலைவர்களுள் தலை சிறந்தவராவார்.

(சிதம்பரனார் ஒரு வழக்கறிஞர்; வீர வாழ்க்கை நடாத்திய வீரர்; சிறந்த தமிழ்ப் புலவர்; பேச்சில் பெரு நாவலர்; முதன் முதல் கப்பல் ஓட்டிய உத்தமர்; சாதி சமயங்கடந்த தேச பக்தர்; செய்ந் நன்றி மறவாச் செம்மல்.)

அத்தகைய பெருமை வாய்ந்த சிதம்பரனார், தாய்த் திருநாட்டின் திருப்பணியில் முற்றுந் துறந்த முனிவர்போல சுகபோகங்களைத் துறந்து, தொண்டாற்றிப், பல ஆண்டுகள் சிறையில் தவம் கிடந்தார். அண்டினோர்க்கு வாரி வாரி அளிக்கும் அன்னாரது செம்மை சான்ற திருக்கரங்கள் சிறையில் செக் கிழுக்கும் பெருமையை அடைந்தது. அவர் இந் நாட்டின் விடுதலைக்காகப் பட்ட எல்லையற்ற இன் னல்கள் அனைத்தும் இக்காலத்து மக்கள் மனதில் நாட்டுப் பற்றையும், தியாக உணர்ச்சியையும்,

சிறந்த ஆவேசத்தையும் ஊற்றெடுத்துப் பதியச் செய்யும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை. சுருங்கக் கூறின் நமது சிதம்பரனாரை அக்காலத்தில் தமிழ் மக்கள் தென்னாட்டுத் திலகர் என்று கூறியது சாலவும் பொருத்தமேயாகும் மலை அசைந்தாலும் அசையாத மனத்தவராகிய திலக முனிவரது அரசியல் கொள்கையைத்தான் பின்பற்றி வந்தார் சிதம்பரனார் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்"

என்னும் வள்ளுவர்வாக்கு, சிதம்பரனாரது வாக்கு வன்மைக்கு சான்றாக நிற்கும்.

சிதம்பரனார் அரசியலில் ஈடுபட்டு, பல கூட்டங்களில் சொற்பொழிவாற்றுவார். அந்தக் காலத்தில் சிதம்பரனாரது சொற்பொழிவு இல்லாத கூட்டத்தைக் காண்பதரிது. சிதம்பரனார் பேச்சில் பெருநாவலர். அவரது கள்ளங்கபடற்ற, ஆவேச மிகுந்த பேச்சுக்கள் கேட்போர் அன்றி, கேளாதாரையும் பிணிக்கச் செய்யும் பான்மையுடையவை.

சிதம்பரனாருக்குத் திருக்குறளில் இரண்டு அதிகாரங்களில் எல்லையற்ற ஆர்வம். அவை 'ஊழ், செய்ந்நன்றி அறித'லும் ஆகும். உலகத்தில் மக்களால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை யென்னும் கோட்பாட்டில் திடமான நம்பிக்கை உடையவர்.

"உலைவின்றித் தாழாது முயற்சி செய்யின்
ஊழையும் உட்பக்கங் காண்பர்"

என்ற குறளை மக்களுக்கு ஒவ்வொரு கூட்டத்திலும் உணர்ச்சியுடன் எடுத்து உரைப்பார். அதற்குச்

சான்றாக மறலியை வென்ற மார்க்கண்டன் சரிதத்தைக் கூறுவார். 'தமிழ் மக்கள் எக்காரணத்தையிட்டும் தமக்கு ஒருவர் செய்த நன்றியை மறக்கலாகாது. செய்ந்நன்றி மறந்த மக்கட்குக் கழுவாயேயில்லை' யென்று கூறி, அதற்குச் சான்றாக

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்னும் சிறந்த குறளை எடுத்துக் இசைப்பார்.

சிதம்பரனாருக்கு உடலும் உயிருமாயிருந்தது, தூத்துக்குடி சுதேசி நாவாய்ச் சங்கம். அந்த நாவாய்ச் சங்கத்தை நிறுவி அதன் அமைச்சராயிருந்து அல்லும் பகலும் ஒல்லும் வகையால் ஓயாது உழைத்துத் தொண்டாற்றிவரும் காலத்தில் கப்பல் வாங்கி வருவதற்காகச் சிதம்பரனார் பம்பாய்க்குச் செல்ல வேண்டியதாயிருந்தது. சிதம்பரனார் பம்பாய்க்குக் கல்கத்தா மார்க்கமாகச் சென்றார். அதாவது 1906, டிசம்பர் மாதத்தில் கல்கத்தா மாநகரத்தில் காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் நடைபெற்றது. அரும்பெருங் கிழவர் தாதாபாய் நௌரோஜி தலைமை வகித்த, அந்தத் தியாக புருஷர்கள் நிறைந்த திருக் கூட்டத்திற்கு இவர் ஒரு பிரதிநிதியாகச் சென்றிருந்தார்.

பின்னர் கல்கத்தாவிலிருந்து பம்பாய் சென்று கப்பல் வாங்கிக் கொண்டு 1907, மே மாதத்தில் சிதம்பரனார் தூத்துக்குடி திரும்பி வந்தார். அது வரை திருவாளர் சி. த. ஆறுமுகம் பிள்ளை அவர்களும் நானும் வேறு சிலரும் தூத்துக்குடியில்

நாவாய்ச் சங்க சற்பணியில் ஈடுபட்டிருந்தோம். தூத்துக்குடிக்குச் சிதம்பரனர் வந்தவுடன் தமது இரண்டாவது புதல்வருக்குப் பெயரிடும் விஷயமாய்த் தன் கருத்தை வெளியிட்டார். "நான் கல்கத்தாவுக்கும் பம்பாய்க்கும் போயிருந்த காலத்தில் எனக்காகத் தூத்துக்குடியில் நாவாய்ச் சங்கத்துக்குத் தொண்டாற்றிய நல்லோன் சி. த. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் பெயரையே என் மைந்தனுக்கு வழங்கி அழைக்கப் போகிறேன்" என்று கூறி ஆறுமுகம் என்னும் பெயரால் அழைத்து, தனது என்றும் மறவா நன்றிக்குச் சான்ருகச் செயலிற் காட்டிப் போந்தார்.

இன்னும் சிதம்பரனர் கோவைச் சிறைக் கோட்டத்தில் இருந்த காலத்தில் அன்னருக்கு ஆர்வம் நிறைந்த துணைவராகயிருந்து உதவிபுரிந்த உத்தமர், வழக்கறிஞரான திருவாளர் சி. கே. சுப்பிரமணிய முதலியார் என்னும் சிறந்த தமிழ் அறிஞராவர். பல வகையாலும் தமிழுக்கு அரிய தொண்டாற்றி வரும் அன்னரின் பெயரை தமது மூன்ருவது குமாரனுக்குச் சூட்டி தமது நன்றியைச் செலுத்துவாராயினர். எனது இளைஞர் பரலி சு. நெல்லையப்பர், சிதம்பரனர் கோவைச் சிறையில் தவங் கிடந்த காலத்தில் அங்கு சென்று கோவை வழக்கறிஞர் ஆதரவு கொண்டு சிதம்பரனருக்கு உதவி புரிந்ததும் அவர் வேண்டுகோட்படி சிதம்பரனர் தமது வாழ்க்கை வரலாற்றை அகவலாகப் பாடி, நெல்லையப்பருக்கு அளித்ததையும் இங்கு குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.

இன்னும், சிறந்த வழக்கறிஞராயிருந்த சிதம்பரனார், சிறைக் கோட்டம் சென்று திரும்பிய பின், அக்காலத்திய அரசியல் சட்டம், சிதம்பரனாரை மீண்டும் வழக்கறிஞர் பதவியை வகிப்பதற்கு ஒரு முட்டுக்கட்டையாக யிருந்தது. சிதம்பரனார் மீண்டும் வழக்கறிஞர் பதவியை அளிக்குமாறு அரசாங்கத்தாரிடம் அநுமதி கோரியபோது உதவி செய்தவர்களில் ஒருவர் சென்னை உயர்தர மன்றத்து நீதிபதியாயிருந்த இ. எச். வாலஸ் எம்.ஏ., ஐ.ஸி.எஸ். ஆவர். அன்னாரது பெயரைத் தன் கடைசி மைந்தனுக்கு வாலீஸ்வரன் என்னும் பெயரால் வழங்கி தமது நன்றியைச் செலுத்தினார். இந்த வாலஸ் துரைமகனார்தான் தூத்துக்குடியில் கூட்டு நீதிபதியாயிருந்து நீதி செலுத்தியவர். அவரது 'கோர்ட்'டிலுள்ள கிரிமினல் வழக்குகளில் சிதம்பரனார் எதிரிப் பக்கம் வக்கீலாகத் தோன்றி வாதுசெய்து வழக்கறிஞர் பதவியில் வல்லுநர் எனப் பெயர் பெற்றார்.

நீதிபதி வாலஸ் துரைமகனாருக்குச் சிதம்பரனாரது பெருங்குணம் பெரிதும் தெரியும். சிதம்பரனார் மீண்டும் வழக்கறிஞர் பதவியை அடைவதற்குப் பெரிதும் உதவியாயிருந்தவர்களில் காலம் சென்ற சர். எஸ். குமாரசுவாமி ரெட்டியாரும் ஒருவர். இந்த மாகாண மந்திரியாயிருந்த அவர், நெல்லை ஜில்லாவில் அரசாங்க வழக்கறிஞராயிருந்து சிறந்த செல்வாக்குப் பெற்றிருந்தார். சிதம்பரனாரது செம்மை சான்ற குணத்தைப் பற்றி அவர், ஒரு யோக்கியதா பத்திரம் அளித்ததும் குறிப்பிடத் தக்கதாகும்.

தவிர, சிதம்பரனார் சிறையிலிருந்த காலத்தும் வெளிவந்த பின்னரும் பலவழிகளிலும் உதவி புரிந்தவர்களில் தென் ஆப்பிரிக்காவிலுள்ள தஞ்சை ஜில்லா தில்லையாடிவாசி, திரு. வேதியப்பப் பிள்ளை என்பவர் குறிப்பிடத் தக்கவராவர். அவர், காலத்தில் செய்த நன்றிக்காகச் சிதம்பரனார் தமது மகள் ஒருவருக்கு வேதவல்லி என்னும் பெயரை வழங்கித் தமது நன்றியைச் செலுத்திப் புகழ் பெற்றார். தமது நண்பர் நெல்லை ஞானசிகாமணி முதலியார் தமக்குத் தமிழ் கற்றுக் கொடுத்ததன் ஞாபகார்த்தமாக மூத்த குமாரிக்கு ஞானவல்லி என்று நாமகரணம் செய்தார்.

இத்தகைய செய்ந்நன்றி மறவாத செம்மல் சிதம்பரனுருக்கு ஞாபகார்த்தமாகத் தமிழ் நாட்டில் அங்கும் இங்குமாக சில வாசகசாலைகளும், மண்டபமும், சென்னையில் ஒரு சிலையும் அமைத்துத் தமிழ் மக்கள் ஒரு சிறிதளவில் தங்கள் நன்றியைக் காட்டியுள்ளனர். சிதம்பரனார் பெருமைக்கு இத்தகைய சின்னங்கள் சிறிதளவுங் காணாது.

சிதம்பரனார் வாழ்க்கை வரலாறு கூட இது வரை விரிவான முறையில் வெளி வரவில்லை. இந்த மனக் குறைவு மறைந்து, நாடெங்கும் சிதம்பரனாரின் பெயரும் புகழும் உணர்வும் உற்சாகமும் பரவும் வண்ணம் தமிழ் மக்கள் பாடுபட வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

★

# நாவாயாண்ட சிதம்பரனார்.

"வெளிலிளக்குங் களிறு போலத்
தீம்புகார்த் திரை முன்றுறைத்
தூங்கு நாவாய் துவன்றிருக்கை
மிசைக்கூம்பி னசைக் கொடி"

— பட்டினப்பா

நிலமீது நடந்தும் நீரின் நீந்தினவாறுமே நடமாடி வந்தனர் மிகு பண்டைகாலத்து மக்கள். காலப் போக்கில் தரைமீது நகர்ந்த உருளைகொண்ட ஊர்திகளையும் திரையேறி ஏகின நாவாய்களையும் வானில் இவர்ந்து பறக்கும் சிவிகைகளையும் மாந்தர் காணப் பெற்றனர். இன்று நிலத்திலும் நீர்ப் பரவையிலும் வான வெளியிலும் பலதிறத் திகிரிகள் வயங்கின வண்ணமிருப்பன. அவை யாவற்றினுள்ளும் திரை கடலோடும் நியமிதக் கப்பல்களே (Liners) மாண்பின் பொலிவன. 'மேரியரசி' (Queen Mary), 'ஒலிம்பிக்' (Olympic) இன்னோரன்ன பீடுகெழு நாவாய்கள் பெரும் நகரங்களோவென ஓங்கு திரைகளை இறுமாப்புடன் எதிர்த்துக்கொண்டு கடலின்கண் இயங்குகின்றன. நீரில் மிதந்தோடும் கலங்களைப் பொறுத்த பொருணுவச் (Physics) செய்திகள் சிலவற்றை இனிச் சுருக்கமாய்க் கருதலாம்.

ஆதியில் காணப்பெற்ற நீரோடு கலங்கள் சிறு படகுகள், தெப்பங்கள், தோணிகள் இன்னோ

ரன்னவே. நீரை அறுத்துக்கொண்டு செல்லற் கென அவை பொதுவாகத் தண்டு வலிக்கப்பட்டு வந்தன. அம்முறையை யொட்டிப் பின்னர் மனித பலங்கொண்டே மரக் கலங்கள் ஓட்டப்பட்டன. பிற்பாடு பாய்மரக் கப்பல்கள் கட்டப்பட்டன. இயற் கையில் வீசும் காற்றுல் கப்பலின் விரிந்த பாய்கள் புடைத்துத் தள்ளப்பட்டு நாவாய் செல்லும் வண் ணம் அமைக்கப் படலாயிற்று. சென்ற நூற்றுண் டின் பிற்பகுதி வரைப் பாய்மரக் கப்பல்களே பல கடல்களிலும் திரிந்தோடி வந்தன. அவற்றிலேயே நாடு காணப் பயணம் சென்றேரும் திரவியம் தேடிச் சென்ற வணிகரும் பல மண்டிலங்களுக்கும் இயலி வந்தனர். பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதிக் காலத்திலேயே நீராவி இயந்திரங்கள் பொருத்தப் பட்ட கப்பல்கள் கட்டப்படலாயின. வீசு காற்றின் முன் பாய் விரித்தபடி விரைந்தோடின கப்பல் களின் காட்சி கடற் பரப்பின் கண்ணினின்று மறைந்து போகலாயிற்று. நீராவி இயந்திரங்களே யன்றி எண்ணெய்ப் பொறிகளால் இயக்கப்பட்டு செல்லும் கப்பல்களும் இன்று உள. அவற்றின் தொகை மிகுதியாய்க் கொண்டு வருகிறது. இங்ஙனம் பல நாடுகளிடை போக்குவரத்து செய்துவரும் பல திற விசைக் கப்பல்களிலும் நீரை ஊடுருவிச் செல் லும்படி செய்தற்கான அமைப்புக்கள் உள. அவ் வாறுன அமைப்பு புரமுய்த்துகை (Propeller) அல்லது திருகுகை (Screw) எனப்படுவது.

புரமுய்த்துகையானது கப்பலின் பின்புறத்தில் பொருத்தப்பட்டிருக்கும்; அது இரண்டு அல்லது

மூன்று துடுப்புக்களின் கோவையானது; கோக்கப் பட்ட இடத்திலுள்ள இருசை நடுவாய்க் கொண்டு அத்துடுப்புக்கள் நீரில் மூழ்கினவாறு வெகு விரைவாய் சுழல்விக்கப்படுகின்றன. மரக் கட்டையினுள் முடுக்கப்படும் திருகாணியொன்று அக் கட்டையைத் துளைத்துக் கொண்டு அதனுள் ஏறுவதைப்போல கப்பலில் தொடுக்கப்பட்ட திருகுகையும் அதனுடன் இணைக்கப்பட்ட கப்பலும் நீரை ஊடுருவிக்கொண்டு முன்னேறுவன. திருகுகையின் செலுத்துத் திறன் அதன் துடுப்புக்களின் வடிவத்தைப் பொறுத்து இருக்கும். நீண்ட ஆராய்ச்சியின் விளைவாய் சிறந்த வடிவம் எதுவானது எனத் தெரிய வந்துள்ளது. இறக்கைச் சரிவுக் கோதுகை (Aerofoil Section) யானது ஒரு படித்தான தட்டைக் (Uniform Plane) கோதுகை வடிவத்தை விட செலுத்துத் திறன் பொறுத்துச் சிறந்ததாம். அவ்வாறான கோதுகை துடுப்பின் நுனியினின்று நடுக் கோவையிடம் வரை படிப்படியாய்ச் சரிந்து வரும் தட்டமாயிருப்பது. அதன் அளவும் சாய்வுக் கோணமும் தக்கவாறாய் மாறி வருவனவாயினும் தட்டையியல் ஒரே வண்ணமாயிருக்கும். அங்ஙனமாக, துடுப்பின் வடிவமானது நுட்பத் திருத்தமாய்க் கூர்ப்புற்றவாறு அமைக்கப் படுவதன் நோக்கம் யாதெனின், அதன் பகுதிகள் ஒவ்வொன்றும் அதனதனைப் பொறுத்த வினையைச் செவ்வனே ஆற்றல் வேண்டும் என்பதேயாம். அவ்வாறான செய்வினைகள் நீரைத் தள்ளிக் கொண்டு முன்னேறுவதற்குத் தக்க உந்துகாட்பு (Thrust) ஆற்றுவிக்கப்படல் என்பதும், பற்பல பகுதிகளுக்கான உந்து காட்புக்கள் ஒன்றையொன்று

எதிர்த்தபடி யாகாமல் ஒருங்கே இசைந்தபடி உறுத்துவிக்கப்படல் என்பதுமாம். நீரினூடே செல்லும் இறக்கைச் சரிவு கோணுகையைப் பொறுத்த வலிமைகள் இரு வாட்டங்களில் உறுத் தப்படுவன. ஒன்று, நீரின் எதிர்ப்புள்ள வாட்டமா யிருப்பது; மற்றொன்று அதற்குக் குறுக்கையான வாறு இருப்பது. ஆகவே, இறக்கைச் சரிவுக் கோணுகை கொண்ட புரமுய்த்துகையின் சுழற் சியை ஒட்டி, நீரைத்தாக்கிச் செல்லும் முன்னேச்சு உந்து காட்டும், சுழற்சி ஆயத்தை நடுவாய்ப் பற்றின முடுக்கு வலிமையும் ஏற்படுவன. முன்னை யது கப்பலை முன் செலத் தூரப்புவது. பின்னையது சுழலு இருசின் வழியே சுழற்றுப் பொறி உகைத் தும் திருப்புத் தகவை எதிர்த்துச் சீராக்குவது. நீரைக் கிழித்துக்கொண்டு கப்பல் முன்னேற ஏற, புரமுய்த்துகைத் துடுப்புக்களின் நுனிகளானவை நீரில் சுருண்டு சுருண்டு வளைந்து போகும் பாதை கொண்டவாறு இயங்குவன. ஒவ்வொரு துடுப்பும் நீரை அலமரச் செய்கிறது. முதற் துடுப்பால் அதுக் கப்பட்ட நீர்ப் பகுதிக்கு அடுத்த துடுப்பு வரும் போது, ஆங்கு அதனுல் உறுத்தப்படும் உந்து வலிமை குறைந்திருக்கும். ஆகவே துடுப்புக்களின் எண்ணிக்கை மிகுதியாதலால் யாதொரு பயனு மில்லை. மூன்று துடுப்புக்களுக்கு மேல் இருத்த லால் இடைஞ்சலே உண்டாகும் எனக் காணப் பட்டுள்ளது. கப்பலொன்றில் நான்கு துடுப்புக்கள் கொண்ட புரமுய்த்துகை பொருத்தப்பட்டது என வும் அவற்றிலொன்று தற்செயலாய் முறிந்து போயிற்று எனவும் அதன்பின் அக்கப்பல் முன்னை

விட விரைவாய் செல்லலாயிற்று எனவும் அதைச் செலுத்தற்கான செலவும் குறைந்தது எனவும் கூறும் கதையொன்று புரமுய்த்துகை கட்டும் வினைஞரிடை வழங்கி வருகிறது. நீரின் உராய்வு நிமித்தம் கப்பலின் புரமுய்த்துகை தேய்வுறும். சில ஆண்டுகள் முன்வரை புரமுய்த்துகைகள் வார்ப்பு இரும்பினால் செய்யப்பட்டு வந்தன. நீரில் பட்டுத் தோய்ந்து அவை விரைவில் துருவேறினவாயாகி உடைந்து போகவும் நேர்ந்தது. ஆதலால் இன்று புரமுய்த்துகைகள் வெண்கலத்தால் செய்யப்படு கின்றன.

புரமுய்த்துகை கோக்கப்பட்டுள்ள இருசு விரைவாய்ச் சுழன்று கொண்டிருக்கும்படி செய்தற்கென அமைக்கப்படும் விசையைப் பற்றி இனிக் கூறலாம். நீராவி இயந்திரங்களாயினும் எண்ணெ யூற்றி ஒட்டப்படும் பொறிகளாயினும் தக்க விசை மூட்டும் கருவிகளாய் கப்பல்களில் பொருத்தப்படு கின்றன. நீராவி இயந்திரங்களில் பல வகைகள் உண்டு. அவற்றில் முக்கியமானவை மாறி மாறி யுகைத்தும் (Reciprocating)வகையினதும் வீசுவுகைப்பு (Turbine) வகையினதுமாம். இரு வகைகளிலும் கொதிகலங்கள் (Boilers) இருப்பன. மாறி மாறி யுகைத்தும் வகையினதில் அதைத் தவிர முக்கியமா யிருக்கும் அமைப்புக்களானவை, குழல் (Cylinder) பீச்சான் (Piston,) நடுவுருளை (Fly-wheel) என்பன. கொதிக்கலத்தி னின்றும் வரும் நீராவியானது, பலவகைக் குழாய்கள் வழியே செலுத்தப்பட்டு நீராவிப் பேழை (Steam Chest) என்ற அமைப்பை

அடையும். ஆங்கினின்று தக்கவாறாய்ப் பொருத்தப் பட்ட ஒருவழிச் செலுத்துவிகளின் (Valves) வழியே குழலுக்குள் செலுத்தப்படும். சீர்த்திட்டமான வாறு நீராவிச் செலவு ஆளப்படலின் விளைவாய் குழலினுள் பீச்சான் முன்னும் பின்னுமாய்த் தள் ளப்பட்டு வரலாகும். பீச்சானுடன் தொடுப்பான தண்டு முன்னும் பின்னுமாய்ச் சென்று வந்தவாறு அசைவுறும். தண்டின் நுனியுடன் தக்கபடி கோக்கப்பட்ட இருசும், அதனுடன் கோக்கப்பட்ட நடுவுருளையும் சுழல்விக்கப்படும். இருசுடன் தொடர் பான வழியே கப்பலின் புரமுய்த்துகை சுழற்சி யுற்றதாகும். இவ்வகை நீராவிப் பொறியின் நிறை வேற்றுத் திறன் (Efficiency) நீராவியின் அழுக்க மும் (Pressure) வெப்ப நிலையும் (Temperature) மிகுதி யாக, ஆக, உயர்ந்து வரும். வீசுவுகைப்பு வகை யான நீராவிப் பொறியின் கொதிகலத்தினின்று வரும் நீராவியானது தக்கமுறையில் வீசப் படலை யொட்டி, அவ்வீச்சால் தாக்கப்பட்ட உருளை யொன்று சுழல்விக்கப்படுகிறது. இவ்வகை நீராவிப் பொறியில் நீராவியின் அழுக்கத்தினளவு எதுவா யிருப்பினும் நிறைவேற்றுத் திறனின் அளவு வேறு படாமலிருக்கும். ஆனல் 1000 குதிரைத் திறன் (Horse power) என்ற அளவைவிடக் குறைத்த வள வான ஆற்றலை விளைவிக்கக் கூடிய பொறிகளை அமைத்தல் இயலாது. எனவே சிறு கப்பல்களுக்கு இவை ஏற்றவையன்று. ஆதலின், பெரும் நாவாய் களில் வீசு உகைப்பு இயந்திரங்களும் சிறு கப்பல் களில் மாறி மாறியுகைத்தும் பொறிகளும் அமைக் கப்படுகின்றன. சிற்சில நாவாய்களில் இருவகை

களும் இணைக்கப்படுகின்றன. மாறி மாறி புகைத்தும் பொறிகளை அழுக்க மிக்க நீராவியைச் செலுத்தி ஓட்டுவித்த பிறகு வெளிப்படும் அமுக்கம் குறைந்த நீராவியைக் கொண்டு வீசுவுகைப்பு இயந்திரங்கள் இயக்கப்படுகின்றன. இங்ஙனம் நிறைவேற்றுத் திறனின் அளவு மிகையாக்கப்படுகிறது. எண்ணெயூற்றி ஓட்டப்படும் பொறிகளில் எண்ணெய் ஆவியும் காற்றும் சேர்வான கலவை வெப்ப மிகுதியின் நிமித்தம் இயைபு மாற்றமுற்று (Chemical change) விரிதலைப் பொறுத்துக் குழலில் பீச்சான் தள்ளப்பட்டு வருவதாகும். தக்க தொடுப்பின் தொடர்பாய் புரமுய்த்துகை சுழல்விக்கப்படுகிறது.

நீராவி இயந்திரங்களைவிட எண்ணெயூற்றியோட்டும் இயந்திரங்கள் பல தகவுகளைப் பொறுத்துச் சிறந்தவை. எண்ணெயூற்றி யோட்டப்படும் இயந்திரத்தின் நிறைவேற்றுத் திறன் 35% வரை இருக்கலாம். நீராவி இயந்திரத்தினது 25% க்கு மேலிருக்காது. ஓரளவான வேலை செய்யக்கூடிய எண்ணெயூற்று இயந்திரமொன்றின் கனம், அதேயளவான வேலை தரக்கூடிய நீராவி இயந்திரமொன்றின் எடையில் மூன்றில் ஒரு பங்கே இருக்கும்; அதற்கு வேண்டியதான எண்ணெயை நீராவி இயந்திரத்திற்கு வேண்டப்பட்ட நிலக்கரியை வைக்க அவசியமான இடத்தில் அரைப் பங்கு அளவான இடத்தில் வைத்து விடலாம். அதனாலேயே எண்ணெயூற்றும் இயந்திரங்களைக்கொண்ட நாவாய்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

கப்பலானது நீரைக் கிழித்துக்கொண்டு செல்லுங்கால், அது எதிர்த்துக் கொண்டே போகும் வன்மைகள் பலதிறப் பொருட்டுக்களைப் பொறுத்து எழுவன. நீரின் மூலத்துகள்களிடையானப் பற்று வலிமை அவ்வாறானவற்றில் முக்கியமானது. அது புரணியுரசல் (Skin friction) எனப்படும். கப்பலின் சலனத்தை எதிர்க்கும் வலிமைகளில் 80 சதவீதம் அங்கிமித்தமானதே. நீரினுள் முழுகினவாறு செல்லும் கப்பற் பகுதியின் வெளிப் பரப்பின் மீது ஒரு வகையான சாந்து பூசப்படலால், அவ்வெதிர்ப்பின் அளவு சிறிது வரை குறைக்கப்படுகிறது. இன்னொரு வகையான எதிர்ப்பு, கப்பலின் கீழ்ப் புறத்தில் பாசிகள் கடற் பூண்டுகள் இன்னோரன்னவை ஒட்டிக்கொள்வதால் ஏற்படுவது. அவை மிகுதியாய்ச் சேராமலிருத்தற்கெனக் கப்பலின் அடிப் புறத்தில் எண்ணெய்ப் பசையான ஒரு வகைச் சாந்து பூசப்படுகிறது. மூன்றாம் வகையான எதிர்ப்பு கப்பலோட்டத்தையொட்டி எழுகிற அலைகளின் விளைவானது. கப்பலின் முன்புறமும் பின்புறமும் கூம்பினவாறு யிருக்கும்படி அமைத்தலால் அவ்வெதிர்ப்பின் எதிர்ப்புக் குறைந்தபடி செய்யப்படுகிறது. இவ்வாறான பலவகை எதிர்ப்புக்களின் அளவுகளும் கப்பல் செல்லும் விரைவினளவைப் பொறுத்தவாறு வேறுபடுவன. விரைவினளவு மிகுதியாக, ஆக, எதிர்ப்பு வலிமையின் அளவும் மிகுதியாகும். விரைவினளவு மிகுதியின் மும்மடக்கை (Cube)யான தகுவீதமாய் (Proportion) எதிர்ப்பளவின் மிகையிருக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது, மணிக்கு முப்பது மைல்கள் 'என்ற

விரைவுடன் செல்லும் போதான எதிர்ப்பினளவு மணிக்குப் பத்து மைல்கள் என்ற விரைவுடன் செல்லும் போதான எதிர்ப்பினளவைவிட ($3^3$) 27 மடங்கு மிகுதியாயிருக்கும். எனவே கப்பலைச் செலுத்தற்கானத் திறனும் 27-மடங்கு மிகுதியாயிருத்தல் வேண்டும். பொதுவாகச் சாமான்கள் ஏற்றிச் செல்லும் கப்பல்கள் மணிக்கு 12 முதல் 18 மைல்கள் அளவான விரைவுடன் போகின்றன; பிரயாணிக் கப்பல்கள் 20 முதல் 40 மைல்கள் வரையான விரைவுடன் செல்வன.

நாவாய்களைப் பற்றின செய்திகள் சிலவற்றைச் சொல்லினேன். அவற்றைக் குறித்து அறியப் பட்டுள்ள யாவற்றுடன் நான் கூறியவை ஒப்பிடப் படின் நான் கூறியவை நுண்மணலொன்று பெருமலையிலுள்ள வீதத்திலிருப்பன. 18 நூற்றாண்டுகளின் முன் நம் நாட்டினோர் அற்றை நாவாய்ச் செய்திகள் அனைத்தையும் தமது மொழி வாயிலாகவே அறிந்திருந்தனர்; நாவாயோட்டும் கலையிலும் வல்லுநராயிருந்தனர். பிற்காலத்தில் அவ்வறிவையும் அத்தகைச் செயலாற்றும் வன்மையையும் நம்மனோர் இழந்துவிட்டனர். மேலை நாட்டினர் அவ்விரு துறைகளில் மேன்மையுற்றுள்ளனர். செயலுடன் அறிவும் கைபிணைத்துச் செல்லும்படியான தெரியற் செய்கையில் (Science) சிறந்தவராய் அன்னோர் விளங்குகின்றனர். (பண்டைச் செயலையும் அறிவையும் பறிகொடுத்து விட்டுத் தமிழ் நாட்டார் தாழ்ந்தனர். ஆயினும் இன்று கிளம்பிவிட்டனர் தமது உரிமையை நிலை நாட்டற்கு. பல வகையான

இடையூறுகளை வென்று நாவாயாட்சிக் குழு (Navigation Company) நிறுவி, தொழிலுக்குத் தெரிவும் அறிவுக்குச் செயலும் இன்றியமையாதன என எடுத்துக் காட்டினார் தென்னாட்டுப் பெருமானான காலஞ்சென்ற வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள். வாழ்க்கையில் சிறப்பு இன்னதென அறியாமல் உறங்கிக் கொண்டிருந்த தமிழ் மக்களை அவர் தட்டியெழுப்பினார். முந்து பூம்புகாரின் துறைமுகம் கொண்டிருந்த நாவாய்க் காட்சியை நமது கண்முன் கொணர்ந்தார். அறிஞர் தமது அறிவைச் செயலாற்றுமுகத்தான் பயனுறு துறையில் செலுத்தல் வேண்டும் எனவும் வினைஞர் தமது செயலாற்றுந் திறனை அறிவின் துணை கொண்டு விரித்தல் வேண்டும் எனவும் தமது அறிவார்ந்த செயலென்ற எடுத்துக் காட்டால் விளக்கினார். நாவாயோட்டி கத்தாப் புகழெய்தின அருன் மகனின் நினைவறாமல் நந்தமிழோர் நடப்பாராக; அத்தென் புலத்தோன் காட்டின நல்வழியைப் பின்பற்றி வயங்கி நம்மனோர் வாழ்க்கையின் சிறப்போங்கி உய்துவாராக!

# தென்னாட்டுத் திலகர்.

மலைச் சிகரங்களுக்கு மத்தியில் அமையப்பெற்ற அழகிய கொடைக்கானல் எனும் கோடை வாச ஸ்தலத்திற்கு நான் 1936-ம் வருடம் சென்றிருந்த பொழுது, அங்கு நடந்த ஒரு சம்பவம் என் மனதில் ஆழப் பதிந்துள்ளது. நான் தங்கியிருந்த ஆசிரமத்தில் எனக்கு அறிமுகமாகாத பல ஆங்கிலேயர்களும், அமெரிக்கர்களும், சில இந்தியர்களும் இருந்தனர். அவர்களுக்கு என்னை அறிமுகப்படுத்தி வந்த நண்பர், நான் தூத்துக்குடிவாசி என்று சொன்னார். இந்த வார்த்தைகள் காதில் விழுந்தவுடன் இந்திய நண்பருள் ஒருவர் மிகுந்த பரபரப்புடன் ஓடி வந்தார். "நீங்கள் தூத்துக்குடியா? சிதம்பரம் பிள்ளை ஊர்க்காரரா?" என்று ஆவலுடன் கேட்டார். நான் "ஆம்" என்று பதில் சொல்லவே, என்னை இறுகக் கட்டித் தழுவிக்கொண்டார். நாத் தழுதழுக்க, கண்களில் நீர் மல்க, "சிதம்பரம் பிள்ளை சௌக்கியமா? அவர் ஊர் வாசியைக் காணும்பேறு பெற்றேனே!" என்று கூறி என்னை மீண்டும் ஆலிங்கனம் செய்துகொண்டார். இக்காக்ஷி அங்குக் கூடியிருந்த சில மாதர்களுக்குப் பெரு நகைப்பையும், எல்லாருக்கும் பெரு வியப்பையும் விளைவித்தது. எனக்கோ பெருமிதத்தையும் பேர் உவகையையும் அளித்தது! தமிழ் நாட்டின் தேசத் தொண்டர் பக்தியில் ஈடுபட்ட இந் நண்பர் ஆந்திர

தேசத்தவர்; அவர் நாமம் ஸ்ரீனிவாசமூர்த்தி. 'விளையும் பயிர் முளையிலே' என்பார். பதினொன்கு பிராயமாயிருக்கும் பொழுதே, சுதேசிக் கப்பல் நடத்தும் வீரனைத் தரிசிக்கப் பெற்றோரின் உத்தரவைக்கூடக் கேட்காமல் பெல்லாரியிலிருந்து ரயிலேறித் தூத்துக்குடிக்கு வந்து, கப்பல் வீரனையும் தரிசித்துக் கப்பலையும் பார்வையிட்டுச் சென்றாராம். பின்னல் இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பரீக்ஷையில் தேறி, சிலகாலம் வழக்கறிஞராய்ப் புகழ் சம்பாதித்து வருங் காலத்தில், முதல் சத்தியாக்ரக இயக்கம் தேசபக்தர்கள் மனதை இழுக்க, அவர் அதில் ஈடுபட்டு சிறை சென்றார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினரான அன்னாருக்குச் சிதம்பரம் பிள்ளையின் ஊர்வாசியைக் காண்பதுகூட பெரு மகிழ்ச்சியை அளித்தது. வ. உ. சி. யின் வீரச் செயல்களால் தூத்துக்குடி தனி மதிப்பை யடைந்தது.

ஆயினும், தூத்துக்குடி நமது வீரன் பிறந்த ஊர் அல்ல. தூத்துக்குடிக்குப் பத்து மைலுக்கு வடமேற்கேயுள்ள ஒட்டப்பிடாரம் எனும் ஊருக்கே அப்பெருமை உரியது. தென்னிந்திய சரித்திரத்திலே, வீரச் செயல்களுக்குப் பெயர்போன பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்கு அடிவாரத்திலுள்ளது அவ்வூர். அதன் பெருமையை,

'வேண்டிய வெலாந்தரும் பாண்டிய நாட்டில்
தேட்ட நிறைந்த ஒட்டப் பிடாரம்
என்னும் பெயர்கொள் தென்னளகை நகர்'

என்று சிதம்பரம் பிள்ளையே பாடியுள்ளார்.

1872-ம் வருடம் செப்டம்பர் மாதம் 5-ம் தேதி யன்று சிதம்பரம் பிள்ளை ஓட்டப்பிடாரத்தில், சைவ வேளாளர் குலத்தில், சிதம்பரக்கவிஞன் குடும்பத்தில் வள்ளி நாயகம் பிள்ளை குமாரர் உலகநாத பிள்ளைக் கும் பரமாயி அம்மாளுக்கும் புதல்வராய் உதித்தார்.

'சிதம்பரக் கவிஞன் சீரார் பேரன்
உலகநாதன் மகன் சிதம்பரம் எனும்யான்'

என்பது அவரின் வாக்கு. வீராதி வீரன் கட்ட பொம்முவுக்கு ஸ்தானாதிபதி பிள்ளையாயிருந்த சுப்ர மணியப் பிள்ளையும் இவருக்கு நெருங்கிய பந்து. எனவே, வீரமும், கவித்வமும், கலைவாசனையும் இவ ருக்குப் பிறப்புரிமையாய் அமைந்தன. தம் பிதா மகரிடம் முதற் கல்வி பயின்று, ஓட்டப்பிடாரம் கம்மவார் இந்துப் பள்ளியில் ஆரம்பக் கல்வி கற்று, தூத்துக்குடி புனிதர் ஸேவியர் உயர்தரப் பள்ளியில் மெட்ரிகுலேஷன் படித்து, 1891-ம் வருடம் டிசம்பர் மாதம் நடந்த பரீட்சையில் தேறினர். பின்னர் திருச்சிராப்பள்ளியில் சட்டக் கல்விபயின்று, திருநெல்வேலியில் 1895-ம் வருடம் பிப்ரவரியில் நடந்த பரீட்சையில் தேறி, சென்னை உயர்தர நீதி மன்றத்தில் சன்னது பெற்று, தூத்துக்குடியில் இரண்டாவது கிரேடு பிளீடராக 1895 முதல் வக்கீல் உத்தியோகம் செய்தார். பத்து வருடங்களுக்குள்ளாக அத் தொழிலில் பெரும் புகழ் பெற்று செல்வாக்குள்ளவராய்த் திகழ்ந்தார்.

அன்னாளிலும் ஏழைகள்பால் இரக்கங் காண் பித்தார். அவர்களுக்கு உபகாரமாக வழக்கறிஞர் ஊழியஞ் செய்வதுண்டு. ஒழிந்த நேரங்களிலே சைவ

நூல் ஆராய்ச்சி செய்தார். திருக்குறளை நன்றாய்க் கற்றுணர்ந்தார். சுவாமி வள்ளிநாயகம் எனும் அறிஞருடன் சேர்ந்து 'விவேக பாநு' எனும் மாதப் பத்திரிகையையும் நடத்தி வந்தார்.

அவ்விதம் வாழும் நாளில் இந்தியாவின் அரசியல் நிலையைப் பற்றி மக்களின் மனப்பான்மையில் ஓர் மாறுதல் தோன்றியது. இந்தியரின் மீது அனுதாபங் கொண்ட சில பிரிட்டிஷ் பெருமக்களின் எழுப்புதலின் பேரில், தேசீய உணர்ச்சி மிக்க இந்தியத் தலைவர்கள் 1885-ல் இந்திய நேஷனல் காங்கிரஸை ஸ்தாபித்தார்கள். ஆண்டுகள் தோறும் கூட்டங்கூடி, இந்தியாவின் குறைபாடுகளை முறையிட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றி ராஜப் பிரதிநிதிக்கு மனுச் செய்து கொண்டேயிருந்தார்கள். ஆயினும், அதனால் பொது மக்களிடையே யாதொரு கிளர்ச்சியும் உண்டாகவில்லை. 1900-ம் வருடம் முதல் தன்மூப்புள்ள கர்ஸான் பிரபு ராஜப் பிரதிநிதியாக இருந்தார். கோலாகலத்துடன் கல்கத்தாவிலிருந்து கொண்டு இந்தியாவை அரசு புரிந்து வந்தார். தமது குத்தலான மொழிகளால் தூங்கிக்கொண்டிருந்த இந்தியரை அதட்டி எழுப்பினர். இந்தியரின் தன்மானத்தைப் புண்படுத்தினர். வங்காளிகளை விசேஷமாகப் பழித்தார். தலைமுறை தத்துவமாக இந்தியாவைக் கட்டியாள முறைகள் தேடினர். வங்காளிகள் ஏகோபித்து எதிர்த்தனர். அவர்களை அடக்க, வங்காளத்தை இரண்டு துண்டாக்கினர். வங்கையில் மூண்டது நெருப்பு! இந்தியா வெங்கும் எழுந்தது கிளர்ச்சி! முழங்கினது

போர் முரசு! சுதந்திரச் சங்கு எங்கும் தொனித்தது! வங்காளத்தில் இத் தொண்டாற்றினவர்கள் சுரேந்திரநாத் பானர்ஜி, அஸ்வினிக்குமார் தத்தர், அரவிந்தகோஷ் முதலியோர். லாலா லஜபத் ராய் பஞ்சாபின் சுதந்திர இயக்கத்திற்குக் காரணர். மஹாராஷ்டிரத்தில் இவ்வியக்கத்தின் தலைவர்கள் திலகரும் கோகலேயும். தமிழ் நாட்டில் அத்தகைய இயக்கத்தை உண்டாக்கினவர் நமது வீரன் வ. உ. சிதம்பரம் பிள்ளை.

பூர்வகால முதல் தமிழர்கள் வியாபாரத்தில் சிறந்தவர்கள். 'திரை கடலோடியும் திரவியம் தேடு' என்பது அவர்களின் கோட்பாடு. அக்காலத்தில் வாணிபத்திற்காகப் பல சிறந்த துறைமுகங்கள் இருந்தன. கொற்கை, பழைய காயல், தொண்டி, காவிரிப்பூம்பட்டினம், நாகப்பட்டினம் முதலிய துறைகளிலிருந்து கிழக்கே சீனாவுக்கும், மேற்கே ரோம் ராஜ்யத்திற்கும் சரக்குகள் போய் வந்து கொண்டிருந்தன. இவ்வளவு சிறப்பாக விளங்கிய தமிழ் நாட்டின் வியாபாரமும் தொலைந்தது. பொது மக்கள் வறுமை வாய்ப்பட்டனர். வயிறு வளர்ப்பதற்காக, அருகாமையிலுள்ள இலங்கைத் தீவிற்குப் போவதற்குக் கூட அந்நிய நாட்டினரின் கப்பல் உதவியை நாடும்படியான நிர்ப்பந்த நிலைமையும் ஏற்பட்டு விட்டது. இலங்கைத் தீவோடு சொற்பமாய் நாம் செய்து வந்த வியாபாரமும் அந்நிய நாட்டாரின் தயவில் நடந்தது.

இந்நிலையை உணர்ந்த வ. உ. சி. தூத்துக்குடியில் சுதேசிக் கப்பல் கம்பெனி ஒன்று நிறுவ முன்

வந்தார். தென்னாட்டு வியாபாரிகள், செல்வர்கள், தேச பக்தர்கள் இவர்களின் ஆதரவைப் பெற்று, பங்கு ஒன்றுக்குப் பத்து ரூபாய் வீதம் பத்து லட்ச ரூபாய் மூலதனம் சேர்த்து, சுதேசிக் கப்பல் கம்பெனியை 16-10-1906ல் பதிவுசெய்தார். வாலிபர்களுக்கு ஊக்கமளிக்கத் தூத்துக்குடியில் 'சுதேச பால்யர் சங்கம்' ஏற்படுத்தி நடத்தினர். நெசவுத் தொழிலைப் பரவச் செய்யக் கைத்தறிசாலை ஒன்று நிறுவினர். பொது மக்களிடையே தேசீய உணர்ச்சியைத் தூண்டி விடும்படியாகப் பொதுக்கூட்டங்களில் அடிக்கடிப் பிரசங்கம் செய்து வந்தார். தூத்துக்குடியில் பருத்தி ஆலையில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கும், முதலாளிகளுக்கும் வேற்றுமை ஏற்பட்டபொழுது அவர்களைச் சமரசப்படுத்த முயன்றார். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து கஷ்டப்பட்ட பொழுது, அவர்களுக்கு ஆகாரம் அளிக்க, பொதுஜன ஆதரவைப் பெற்றதோடு கூட சர்க்காரையும் உதவி செய்யும்படியாகச் செய்து விட்டார். 'சுதேசி' உணர்ச்சி தூத்துக்குடியில் உச்ச நிலையை அடைந்தது. அந்நிய நாட்டுச் சரக்குகளைப் பொதுமக்கள் வெறுத்தனர். 'சுதேசி இயக்கத்திற்கு' விரோதமாயிருந்தவர்களும் பொதுமக்கள் வெறுப்பிற்கு இலக்காயினர்.

இவ்விதமாக நாட்டிலெங்கும் சுதேச வாஞ்சையை நாட்டினர். இதற்குப் பல இடையூறுகளும் ஏற்பட்டன. அந்நியக் கப்பல் கம்பெனியின் போட்டி ஒரு புறம்; பொதுமக்களின் கட்டுப்பாடில்லாத அளவு கடந்த உற்சாகத்தினால் உண்டான

அழிவுகளும் நஷ்டங்களும் இன்னொரு புறம்; சுப்பிர மணிய சிவாவின் அரசியல் கிளர்ச்சி மற்றொருபுறம்; இதற்கு மத்தியில் சர்க்காரின் அடக்குமுறை வேறு. எல்லாஞ் சேர்ந்து சிதம்பரம் பிள்ளைக்கும் சுதேசிக் கப்பலுக்கும் ஆபத்து விளைவித்தன. சுப்பிரமணிய சிவாவின் பேரில் ராஜத்துரோகக் குற்றம் சாட்டப் பட்டது. சிதம்பரம் பிள்ளை சிவாவுக்குத் தூண்டு கோலாயிருந்ததாக அவர் பேரிலும் குற்றம் சாட்டி விசாரணை நடந்தது. திருநெல்வேலி அடிஷனல் செஷன்ஸ் ஜட்ஜ் ஆயுள்கால தீவாந்திர தண்டனை விதித்தார். சென்னை ஐக்கோர்ட்டார் ஆறு வருடத் தண்டனையாக மாற்றினர்.

முதலில் கோயம்புத்தூர் சிறையிலும், பின்னர் மலையாளத்தில் கண்ணனூர்ச் சிறையிலும் சிதம்பரம் பிள்ளை சிறைவாசஞ் செய்ய நேர்ந்தது. இந்தியா வின் சுயாதீனத்திற்காகச் செக்கிழுக்கும் பெருமை கிடைத்தது. அதைப் பார்த்த கைதிகள் கலகம் விளைவித்தார்கள். அது காரணத்தால் தென்னாட்டி லுள்ள கைதிகளுக்கெல்லாம் நல்லகாலம் பிறந்தது. சிறைக் கைதிகளுக்கு வேலை கொடுக்கும் முறை யிலும், உணவு கொடுக்கும் முறையிலும் சீர்திருத்தம் ஏற்பட்டது. இதுவே பிற்காலத்தில் அரசியல் கைதி களைக் கௌரவமான முறையில் நடத்துவதற்கு முதற் கருவியாயிருந்தது.

சிறை வாசத்திலும் தமிழ் மொழியை மறக்க வில்லை. திருக்குறளை மிகவும் நன்றாய் ஆராய்ச்சி செய்தார். ஆங்கிலேய ஞானி ஜேம்ஸ் ஆலன் என்பவர் இயற்றிய சில அரிய நூல்களை மொழி

பெயர்த்தார். 'மனம் போல வாழ்வு,' 'அகமே புறம்,' 'வலிமைக்கு மார்க்கம்' என்ற பெயர்களுடன் பிரசுரஞ் செய்தார். சிறையிலிருந்தே பிரசுரமான "மனம் போல வாழ்வு, காகிதம், அச்சு, மை, கட்டடம் அனைத்தும் சுதேசியம்" என்ற குறிப்புடன் வெளியாயிற்று.

சுமார் நாலரை ஆண்டுகளுக்குள் 1912-ம்வருடம் டிசம்பர் மாதத்தில் சிதம்பரம் பிள்ளை விடுதலை அடைந்தார். அப்போது வயது நாற்பது. சிறந்த உடற்கட்டு உடையவராயினும் சிறை வாசம் உடல் நலத்தைப் பெரிதும் கெடுத்துவிட்டது. ஆயினும் திடச்சித்தமும், அஞ்சா நெஞ்சமும் முன்போலவே இருந்தன. சுதேசிக் கம்பெனியும் தொலைந்து விட்டது. வருவாயின்றி வறுமையில் வருந்த நேர்ந்தது. 1922-ம் வருடம் மீண்டும் வக்கீலானார். தூத்துக்குடியிலும் சிலகாலம் கோவில்பட்டியிலும் வக்கீல் தொழில் புரிந்தார். பழைய அனல் அடிக்கடி காட்டின போதிலும் கவலையின்றி வாழும்படியான பாக்கியம் கிடைக்கவில்லை. கடைசிக் காலத்தில் திரு. சி. வ. நல்லபெருமாள் பிள்ளை, திரு. அ. செ. சு. கந்தசாமி ரெட்டியார் போன்ற செல்வர்கள் உதவினர்கள் என்றாலும் நமது நாட்டினர் சரியான முறையில் உதவவில்லையென்பது விசனிக்கத் தக்கதே.

சிதம்பரம் பிள்ளை எந் நிலைமையில் இருந்தாலும் தமிழ் மொழியின் மீதுள்ள பற்றை மறக்கவில்லை. சிறைவாச காலத்தில் 1910-ல் முதன் முதலாகத் தொல்காப்பியத்தைப் படிக்க ஆரம்பித்தார்.

பொருளதிகாரத்தின் பேரில் பெரிய ஆர்வம் ஏற்பட்டது. தமிழன் ஒவ்வொருவரும் அதைப் படிக்க வேண்டுமென்ற அவாவும் உண்டாயது. ஆயினும் அந்நூலுக்கு ஏற்றியுள்ள உரைகள் கடின நடையிலுள்ளன வென்பதை உணர்ந்தார். தமிழ் மக்கள் யாவரும் கற்கும்படி எளிய நடையில் ஓர் உரை எழுத வேண்டுமென்று கருதி எழுதவும் ஆரம்பித்து விட்டார். விடுதலையான பின் இளம்பூரணரின் உரையொன்று கிடைத்தது. அதன் உயர்வையும் சிறப்பையும் எளிய நடையையும் கண்டு, தாம் உரை எழுதுவது மிகையென்று நினைத்து அதை நிறுத்திக் கொண்டார். அப்பால் இளம்பூரணர் உரையை அச்சிட்டு, வெளிப்படுத்திக் குறைந்த விலைக்கு விற்றார். அதன் கடைசிப் பாகமாகிய மெய்ப் பாட்டியல், உவமியல், செய்யுளியல், மரபியல் இவற்றை 1936-ம் வருடம் பூரணப்படுத்தி வெளியிட்டு, அவ்வருடமே காலஞ் சென்றார்.

திருக்குறள் படிக்காத தமிழன் தமிழனல்ல என்பது சிதம்பரம் பிள்ளையின் ஆன்ற மொழி. ஆயுட் காலம் வரையில் திருக்குறள் ஆராய்ச்சி அவர் மனதைக் கவர்ந்து கொண்டே யிருந்தது. 'யான் பெற்ற இன்பம் இவ்வையம் பெறுக' எனும் நோக்கத்துடன் அறத்துப்பால் ஆராய்ச்சியை 1935-ல் வெளியிட்டார். அதில் 76 குறள்களின் உரை பரிமேலழகர் உரையினின்றும் வேறு படுகிறது. 12 குறள்களின் உரை அவரின் உரையை வெளிப்படையாக மறுக்கின்றது. பரிமேலழகரின் மூல பாடங்களில் 74, சிதம்பரம் பிள்ளையின் மூல

பாடங்களினின்று வேறுபடுகின்றன. அவற்றில் 30 பாடங்கள் முந்திய உரையாசிரியர் கொண்டுள்ள பாடங்கள். மீதம் 44ம் வ. உ. சி. யின் தானகக் கொண்டுள்ள பாடங்கள். பரிமேலழகர் பாடங்களி லுள்ள வித்தியாசங்கள் ஏடு பெயர்த்தெழுதுவோ ரால் ஏற்பட்ட வித்தியாசங்கள் என்று கருதுகிறார். திருக்குறள் பாயிரத்தில் காணப்படும் 'கடவுள் வாழ்த்து,' 'வான் சிறப்பு,' 'நீத்தார் பெருமை' எனும் மூன்று அதிகாரங்களும் திருவள்ளுவர் இயற்றவில்லை என்றும் அபிப்பிராயப்படுகிறார்.

நக்கீரர் பிறந்த நம் நாட்டில் ரசிகர்களும் ஆராய்ச்சியாளர்களும் தவறை எடுத்துக் கூறத் தயங்குவது நமது கல்வி முறையின் பெருங் குறையே. நக்கீரரின் பெருமை மறைந்தொழிந்த இக்காலத்தில் அதைத் திரும்பவும் தமிழ் நாட்டில் நிலைநாட்ட வழி கோலியவர் சிதம்பரம் பிள்ளை அவர்களே.

1933-ம் வருடம் தூத்துக்குடிக் கம்பன் கழகம் நிறுவப்பட்டது. அதன் மூல ஸ்தாபகர்களில் வ. உ. சி. ஒருவர். கழகத்தார் ஒவ்வொரு வார மும் எனது இல்லமாகிய சௌந்திர விலாஸத்தில் கம்ப ராமாயணத்தை ஆராய்ச்சி செய்துவந்தனர். இக்கழகம் வ. உ. சி. யின் இறுதிக் காலத்தில்தான் ஸ்தாபிக்கப்பட்டதென்றாலும் தீவிர சைவராகிய இவர் இந்நூலைப் பெரிதும் பாராட்டி சுமார் 150 கூட்டங்களில் பிரசன்னமாயிருந்து கழகத்தாருக்கு மிகுந்த உற்சாகம் அளித்து வந்தார். கழகத்தில்

ஊக்கமளித்ததோடமையாமல் தமது வீட்டிலும் கம்ப ராமாயணத்தை ஆராய்ச்சி செய்து வந்தார்.

வ. உ. சிதம்பரம் பிள்ளை வீர மொழிகளை வீசி யெறிந்து தென்னாட்டிலேத் தேசிய அனலை மூட்டி வீரராக வந்து விளங்கிய அக்காலத்தில் நான் அவரைப் பார்த்ததில்லை. முதுமையால் தளர்ந்து வறுமையால் வாடி நின்ற அக்காலத்தில்தான் நான் அவரோடு நெருங்கிப் பழகும் பாக்கியம் பெற்றேன். உடல் தளர்ந்தவரே யன்றி எக்காலத்தும் உள்ளம் தளர்ந்தவரல்லர்.

'இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின்'

எனும் அருங் குறளுக்கு இலக்காயமைந்தவர்.



# தருக்கி நின்ற தமிழன்.

'வாழ்க்கை வாழ்வதற்கே' என்பர் வாழ்க்கையில் சுவை கண்டோரும், சுகம் இருக்கிறது என எதிர்பார்க்கும் வாழ்க்கைப் பாதையில் நுழையாத இளைஞரும். 'வாழ்க்கைத் தியாகம் செய்ய' என்பர் தொண்டர்கள். 'வாழ்ந்து கொண்டே தேவைப் பட்டால் தியாகமும் செய்யத்தான் வாழ்க்கை' என்பர் வாழ்க்கைப் பாதையில் கால் வைத்து விட்டுப் பிறகு தொண்டாற்ற முற்பட்டோர்.

இவற்றில் இறுதியாகக் குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர் தேசத் தொண்டரும், தமிழ் அன்பருமான வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள். "தோன்றிற் புகழொடு தோன்றுக ..." என்ற வள்ளுவர் வாக்கைக் கடைப் பிடித்து ஒழுகியவர் நம் பிள்ளையவர்கள்.

1872-ம் ஆண்டு, செப்டம்பர் மாதம், 5-ம் தேதி திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ஒட்டப் பிடாரம் என்ற ஊரில் பிறந்த இவர், தம்முடைய இருபத்தி மூன்றாவது வயதில் – 1894-ல், வள்ளியம்மையைத் தமது வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டார். 1900-ம் ஆண்டு இவர் தம் சொந்த ஊரை விட்டுத் தூத்துக்கொடிக்குச் சென்று வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டு நடத்தி வருகையில் 1901-ம் ஆண்டில் வள்ளியம்மை காலமானார்.

மனைவியின்பாலிருந்த அன்பால் மறுமணஞ்செய்து கொள்ள இவர் முதலில் ஒருப்பட்டாரில்லை யெனி னும், சுற்றத்தாரின் வற்புறுத்தலின் பேரில் வள்ளியம்மையின் குடும்பத்தைச் சேர்ந்த மீனாட்சி யம்மையை மறுமணஞ்செய்து கொண்டு இல்லறம் நடத்தி வந்தார்.

இவர் தூத்துக்கொடியில் குடியேறிய உடன் சுவாமி வள்ளிநாயகத்தின் துணைகொண்டு 'விவேக பானு' எனும் தமிழ் மாதப் பத்திரிகையை ஆரம் பித்து நடத்தி வந்தார். 1933-ம் ஆண்டில் உடல் நலன் கருதி, ஆத்ம வளர்ச்சிக்குப் பேருதவி செய் யும் மௌன விரதத்தை வாரத்திற்கொரு முறை மேற்கொண்டார். விரத நாட்களில் தமக்கேற் பட்ட அனுபவங்களை எண்ணி, 'தமிழ் நாடு' என்ற தினசரிப் பத்திரிகைக்கு எழுதியனுப்பி வந்தார்.

தேசத் தலைவர்களில் புரட்சிகரமான சீர் திருத்த வாதிகள் யார் என்றால், வட நாட்டிலே காந்தி; தமிழ் நாட்டிலே வ. உ. சிதம்பரம் பிள்ளை யவர்கள். காந்தி இந்தப் புரட்சியை - அதாவது தாழ்த்தப்பட்டவரை வீட்டிற்கழைத்து வந்து உண வளித்தது - தானும் தன் மனைவியும் தனியாக வாழ்ந்து வந்தகாலை, தம் மனைவிக்கு எதிராக நடத் தினார்; ஆனால் வ. உ. சி. யோ இன வேற்றுமை முழுக்க முற்றிய நம் தமிழ் நாட்டிலே, அதுவும் தம் இனச் சடங்குகளிலே தாழ்த்தப்பட்டவரான சுவாமி சகஜானந்தரைத் தம் இனத்தவருடன் அமர்த்தி விருந்துண்ணவும் செய்வித்தார். எம் முறையிலேனும் தாம் கருதியதைச் செயல் முறையில்

செய்து காட்ட வேண்டும் என்ற தீவிர நாட்டங் கொண்ட இவர் இவ்வளவுதானா செய்திருப்பார்?

இவருக்குத் தேசீயப் பற்று பற்றிக்கொண்டது வங்காளப் பிரிவினையின் போது என்றுதான் சொல்லவேண்டும். இதன் காரணமாக வடநாட்டில் அன்னியப் பொருள் விலக்கு பொதுமக்களிடையே தீவிரமாகப் பரவி வந்தது. இதே நிலையைத் தமிழ் நாட்டிலும் முயன்று புகுத்தியவர் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள். அக்காலத்தில் ஒவ்வொரு ஊரி லும் ஊர்க் கட்டுப்பாடு என்ற ஒரு முறை இருந்து வந்தது — வருகிறது. இந்த ஊர்க் கட்டுப்பாடு நம் வ. உ. சி. கொண்ட முயற்சிக்குப் பேருதவியாக இருந்தது. இவருடைய பேச்சுக்குக் குறுக்குச் சொல்வோர் ஊரிலில்லை. காரணம் இவருடைய ஆற்றலுக்கு அவ்வளவு பேரும், மதிப்பும்; சிறப் பாகத் தொழிலாளர், கீழ்ப்பட்டிருந்தனர்.

சுதேசியத்தைப் பரப்ப இவர் முதலில் ஊர் வேலைக்காரர்களைத் தம் வசமாக்கிக் கொண்டார். விதேசியத் துணிகளை வண்ணான் வெளுப்பதில்லை; விதேசிய உடை உடுத்திருப்பவனுக்கு நாவிதன் முடி களைவதில்லை. இப்படி ஒவ்வொரு தொழிலா ளரும் பிள்ளை அவர்களின் ஆணையின் பேரில் விதேசியத்தைப் புறக்கணிக்கத் தம்மாலான முறை களைக் கையாண்டு பார்த்தனர். வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்கள் மட்டும் சுதேசிய மாக இருந்துவிட்டால் போதாது; போக்குவரத்திற் கான கப்பல்களும் சுதேசியமாகவே யிருக்க வேண்டு

மென்ற அபூர்வமான எண்ணம் நம் பிள்ளையவர்கள் எண்ணத்தில் தோன்றிற்று.

அப்போது தூத்துக்கொடியில் அந்நிய முதலைக் கொண்ட 'பிரிட்டிஷ் ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி' தூத்துக்கொடிக்கும் சிங்களத்திற்கும் இடையில் போக்குவரத்திற்குக் கப்பலை ஏற்படுத்தி வைத்திருந்தது. இக் 'கம்பெனி'க்குச் சுதேசியத்தின் பேரால் ஒரு வகையாக சாவுமணி அடிக்க முந்திக் கொண்டவர் நம் பிள்ளையவர்கள். இவரது முயற்சியால் 1906-ம் ஆண்டில் "சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி" நிறுவப் பெற்றது. இக் கம்பெனிக்குப் பாலநத்தம் நிலச் சுவான்தார் மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. பாண்டித் துரைசாமித் தேவர் ஆகியோர் முன்னின்று பேராதரவளித்தார்கள். இதற்குச் செயலாளர் பொறுப்பேற்றுக் கொண்டதற்கேற்ப வ. உ. சி. நாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்து இக் 'கம்பெனி'க்குப் பங்குதாரர்களைச் சேர்த்தார். இவரை நாட்டின் பல பாகங்களில் உள்ளவர்களும் அறிய இது ஏற்ற சந்தர்ப்பமாயிருந்தது. இவர் சென்ற இடங்களிலெல்லாம் ஆவேசமூட்டும் பிரசங்கங்கள் செய்து மக்களைத் தம் வயப்படுத்திக் கொண்டார். தென்னாட்டில் சேர்த்தப் பங்குதாரர்களைவிடக் கல்கத்தாவிலும், பம்பாயிலும் நிறையப் பங்குதாரர்களைச் சேர்த்துக் கம்பெனியைப் பலப்படுத்தினாரென்றால், இவருடையத் தளரா முயற்சியையும், ஆற்றலையும், செல்வாக்கையும் எடுத்துக் காட்ட வேறு என்ன சான்று வேண்டும்?

போதிய அளவு பணம் சேர்ந்ததும் இவர் கப்பல் வாங்கப் பம்பாய் புறப்படும்போது, "கப்பலுடன் திரும்புவேன், இல்லையேல் கடலில் வீழ்ந்து மாள்வேன்" எனச் சபதம் செய்துவிட்டுச் சென்றாராம். என்னே இவரது மனத் திண்மை! இவர் வாங்கிவந்த கப்பலின் பெயர் 'லாவோ.' 'கார்லியோ' என்ற மற்றொரு கப்பலைப் பிரான்ஸுக்குச் சென்று வாங்கி வந்தார் எஸ். வேதமூர்த்தியவர்கள். இவ்விரு சுதேசியக் கப்பல்களும், விதேசியக் கம்பெனி கப்பல்களுடன் போட்டியிட்டுச் சென்றன. அன்னியர், கப்பல் கட்டணத்தைக் குறைத்துப் பார்த்தனர். நீக்கிப் பார்த்தனர். கண்ட பலன்? போவோர், வருவோர் யாவரும் சுதேசியக் கப்பல்களைத்தான் தேடிச் சென்றனர். அரசாங்கம் அன்னிய 'கம்பெனி'க்கு ஆதரவு காட்டிற்று.

அதற்குப் பல வழிகளிலும் இன்னல் விளைவித்து வந்த சுதேசிகளைப் போலீஸார் துன்பத்திற்குள்ளாக்கினர். தொண்டர்கள் தளராமல் தங்களாலானவரை முயன்று விதேசக் கப்பல்களுக்குக் கிராக்கி இல்லாமல் செய்து வந்தனர். இவைகளை எல்லாம் கண்ட விதேசக் 'கம்பெனி' முதலாளிகள், பயமுறுத்தலால் பிள்ளையவர்கள் மசியமாட்டார் என்றறிந்து நயத்தால் அவரைத் தம் வயப்படுத்திச் சுதேசக் 'கம்பெனி'யைக் கவிழ்க்க எண்ணி, இதற்கு ஆணி வேராயிருந்த பிள்ளையவர்களுக்கு லட்ச ரூபாய்கள் தருவதாக ஆசை காட்டினர்! பிள்ளையவர்கள் இதற்கு உடன்பட்டுவிடுவாரெனப் பகற்கனவு கண்டனர் பிரித்தாளும் வர்க்கத்தினர்!

1908-ம் ஆண்டில் திருநெல்வேலியில் 'தேசாபிமான சங்கம்' ஒன்று நிறுவப்பெற்றது. இக்காலத்தில்தான் துறவு கோலம் பூண்ட சுப்பிரமணிய சிவா இங்கு வந்தார். இருவரும் மேடைப் பிரசங்கங்களில் அடிக்கடிப் பேசி மக்களின் தேசிய உணர்ச்சியை வளர்த்து வந்தனர். தேசீய இயக்கத்தில் எப்போதும் பொது உடைமைச் சித்தாந்தம் புதைந்து கிடத்தல் கண்கூடு. பிள்ளை — சிவா இவ் விருவரின் மேடைப் பேச்சுக்கள் மக்களின் - சிறப்பாகத் தொழிலாளரின் — நிலைமையை உள்ளபடி உணர்த்தின. இதன் காரணமாகத் தூத்துக்கொடி 'கோரல் மில்'லில் கூலி போதாதென்ற குறையுடன் வேலை நிறுத்தம் செய்தனர் ஆலைத் தொழிலாளிகள். இவர்களின் ஒற்றுமையோடு கூடிய வேலை நிறுத்தத்திற்குப் பிள்ளையவர்கள் பேராதரவு காட்டி வந்தார். இதன் முடிவு என்னவாயிருக்குமென்று எவரும் எளிதில் கூறிவிடலாம்: முதலாளிகளின் பகைமைதான்.

இந்த வேலை நிறுத்தம் மதுரை ஆலைத் தொழிலாளரிடையே ஒரு தைரியத்தை உண்டாக்கியது. அவர்களும் வேலை நிறுத்தஞ் செய்தனர். இன்று எல்லா இடங்களிலும் வேலை நிறுத்தங்கள் நடந்து வருகின்றன. ஆளில்லாத் திண்டாட்டம் தாண்டவமாடும் இக்காலத்திலேயே இதற்கு ஆதரவு இல்லை; குரல் கொடுத்தால் ஆயிரக் கணக்கில் கூலிக்கு வரத் தயாராயிருக்கும் அந்நாளில் இவர்களைத் தைரியத்துடன் ஊக்குவித்து வேலை நிறுத்தத்தை நீடிக்கச் செய்து, ஒரு வழியாக முதலாளிகளின்

வற்புறுத்தலின் பேரில் சமாதானம் செய்துவைக்க எவ்வளவு மனத் திண்மை வேண்டும் — எண்ணிப் பாருங்கள்!

1908-ம் ஆண்டு மார்ச் மாதம் 9-ம்தேதி வட நாட்டு தேசியத் தலைவர் பிபின் சந்திரபாலர் விடுதலை செய்யப்பட்டார். இந்நாளைத் திருநெல்வேலியில் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டது. விடுதலை நாளைக் கொண்டாடுவது அரசாங்கத்திற்குக் குற்றமாகப்பட்டது. இக் கொண்டாட்டத்திற்கு முற்றிலும் காரணமாயிருந்த பிள்ளையவர்களும், சிவாவும் மற்றும் சிலரும் கைது செய்யப்பட்டார்கள். அடிமை நாட்டில் அடிமைப்பட்டுள்ளவர்களுக்கு உடனளிக்க வேண்டிய அன்பளிப்பு கைது என்பது வெள்ளையர் சட்ட நூலில் பொறிக்கப்பட்டுள்ளது போலும்!

நீதி மன்றத்தில் இவர் செய்த குற்றங்கள் எடுத்துக் காட்டப்பட்டு, இவற்றிற்கான தண்டனைகளும் கூறப்பட்டன. பேச்சில் தேசியம் ஒலித்தது ஒரு குற்றம்; சிவாவுக்கு உடந்தையாக இருந்தது மற்றொரு குற்றம். இவ்விரு குற்றங்களுக்காக இவருக்கு இரண்டு ஆயுள் தீவாந்திர தண்டனை விதிக்கப்பட்டது. பிறகு இவ்வழக்கு 'ஹைகோர்ட்டு'க்கு வந்தது. இங்கு தண்டனை முதலில் பத்து ஆண்டுகளாகவும், அதன் பிறகு ஆறு ஆண்டுகளாகவும் குறைக்கப்பட்டது. இவர் இந்த ஆறு ஆண்டுகளில்- அரசியல் கைதிகளுக்கென்று இன்றுபோல் தனிச் சிறையற்ற அக்காலத்தில் — எவ்வளவு இன்னல்களுக்குள்ளானர் என்பது விவரிக்க ஒண்ணாதது!

தாம் படும் இன்னல்களை இவர் அடிக்கடிப் பாடல் கடிதங்களின் வாயிலாகத் தமது இல்லத்திற்கு அறிவிப்பார்.

இவர் படும் துன்பங்களை அறிந்த இவரது மனைவியார், மன்னர்பிரானுக்குக் கீழ்க்கண்டவாறு மனுச் செய்து கொண்டாராம்: "சிறையதிகாரிகள் என் நாயகனைச் செக்கிழுக்கவும் கல்லுடைக்கவும் வைத்துத் துன்புறுத்துகின்றனர். இதைத் தடுக்க வேண்டும்; இல்லையேல் இக்கணமே அவரைக் கண் மறைவாக அந்தமான் தீவுக்கு அனுப்பி விடுதல் நலம்." மற்றொரு பெண்ணாயிருந்தால், என்ன வென்று கேட்டிருப்பாள்? "நான் தனியாகத் தவிக்கிறேனே, அவர் செய்த குற்றங்களை யெல்லாம் மன்னித்து விட்டு, வீட்டிற்கு அனுப்பி விடுங்களேன். இனி அப்படிச் செய்யப் போகமாட்டார்" எனக் கதறி யெழுதி யிருப்பாள். ஆனால் மீனாட்சியம்மை மேல்குடியில் பிறந்தவர்; அதற்குற்ற முறையில் தான் அவருடைய மனுத்தாளும் அமைந்துள்ளது.

இவர் சிறை சென்றுவிட்டதும் 'கம்பெனி'யை முன்னைப்போல் அவ்வளவு தீவிரமாக, விடாமுயற்சியோடு நீடித்து நடத்த யாரும் முன் வராமையால் அது நாளா வட்டத்தில் மறைந்தே போயிற்று. சிறையினின்று பிள்ளையவர்கள் வெளிவந்தபோது அவரை எதிர் கொண்டழைக்க வறுமை வாயிலில் காத்துக் கொண்டிருந்தது. அந்த வறுமை கூட அவருக்குப் பெருங் குறையாகத் தோன்றவில்லை. லட்சியம் ஈடேறவில்லையே என்ற ஏக்கமே இவரை உருக்கி வந்தது. சிறை சென்றதன் காரணமாக

வக்கீல் தொழில் பறிக்கப்பட்டது. வறுமை, சிபாரிசைத் தேடி திரும்பவும் அந்த 'வக்கீல் சன்னதை'ப் பெற்றுத் தொழிலை நடத்த ஏவிற்று.

வாழ்க்கை முழுவதும் சுகமனுபவிப்பவனையே நோய் விடுவதில்லை என்றால், முதலில் சுக போகத்துடன் வாழ்ந்து, பிறகு சிறை புகுந்து வரகுக் கஞ்சியை உண்டு, அதன் பிறகு வறுமையில் வாடிய நம் தேசத் தொண்டரைப் பிணி பற்றாமலிருக்குமா? பற்றத்தான் செய்தது. முடிவு? செல்வக் குடும்பத்தில் பிறந்து, ஆரம்பத்தில் சீரும் சிறப்புமாய் வாழ்ந்து, பிறகு நாட்டிற்காகச் சிறை புகுந்து பல இன்னல்களை அனுபவித்த இப் பெரியார் மரணத் தருவாயில் தம் மக்களையும், மனைவியையும் வறுமையில் வாட விட்டு விட்டு 1936-ம் ஆண்டு நவம்பர் 18-ம் நாள் தம் முடிவெய்தினார். வாழ்க்கை சிலருக்குத் தெளிந்த நீரோடையாக இருப்பதுண்டு; ஆனால் இவருடைய வாழ்க்கையோ பெரும் சூறாவளி. சூறாவளி அடங்கிற்று. அச்சூறாவளி கொண்ட கொள்கையும் நிறைவேறிற்று. அவர் கொண்ட லட்சியத்தை அவர் வழிவந்த நாம், வெற்றிகரமாக முடித்து வைத்து, வாழ வழிகோலுவோமாக!

15-11-64

20.VC.14

**ஆதி காலத்தில்...**

அறிவுச் செல்வத்தை
அழியாது தேக்கிப்
பரம்பரையாக வழங்கப்
பயன்பட்ட சாதனம்: எழு... ணி.

**ஆனால் இன்றோ...**

கலை, இலக்கியம், பண்பாடு
இவற்றின்
நிரந்தரப் பாதுகாப்பு: அச்சு...

★

- ★ கவர்ச்சிகரமான அமைப்பு!
- ★ கலையழகு மிளிரும் தோற்றம்!
- ★ காலத்தில் வேலை முடித்தல்!

இவற்றிற்கு
30 ஆண்டுகளாகப் புகழ் வாய்ந்தது:

## கருணாநிதி மின்னியக்க அச்சகம்,

**விஜயபுரம் — தஞ்சை ஜில்லா.**

உரிமையாளர்: கருணை. எம். ஜமால்.